Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 07 புதன்கிழமை (23.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 295

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்

உயர்தரத்துடனும்

குறைந்த செலவுடனும்

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628

Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,

பஸ்ரியன் சந்தி,

யாழ்ப்பாணம்.

## யுத்தத்திற்கு பிந்திய காலத்தில் இலங்கையில் பாரியளவு மாற்றம்

### பாராட்டுகிறது தன்சானியா

இலங்கையில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தன்சானியா தெரிவித்துள்ளது.

குறிப்பாக மனிதாபிமான விடயங்கள், சமாதானம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் சாதகமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தன்சானிய வெளிவிவகார அமைச்சர் பெர்னாட் மெம்பே தெரிவித்துள்ளார்.



தன்சானிய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.2013ஆம் ஆண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய விளையாட்டு பங்கேற்கார் ஜனாதிபதி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

கிளாஸ்கோவில் இன்று இரவு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுக்ள் விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்க் மாட்டார் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விஜயத்திற்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும், கிளாஸ்கோ விஜயம் செய்தால் எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்படக் கூடுமெனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இவ்வாறான அழுத்தங்களுக்கு அஞ்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிளாஸ்கோ விஜயத்தை இரத்துச் செய்யவில்லை என மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தவிசாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தருஸ்மனின் சர்ச்சைக்குரிய அறிக்கை இலங்கையிடம் விளக்கம் கோரப்படும்



## சேர் ஜெவ்ரி நைஸ் தெரிவிப்பு

மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கையில் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் குறித்து, அரசாங்கத்தினதும், படையினரதும், விளக்கங்களையும், அனைத்துலக சட்ட நிபுணர்கள் குழு கேட்கவுள்ளது.

இலங்கையில் போரின் போது இடம்பெற்ற மரணங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள, அனைத்துலக சட்ட நிபுணர்கள், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஆராயவுள்ளது.

மோதல்களின் போது எல்லாத் தரப்பினராலும், இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்தும் விசாரிக்கும் உள்ளூர் ஆணைக குழுவுக்கு ஆலோசனை வழங்குமாறு தாம் கேட்கப்பட்டுள்ளதாக, சேர் ஜெவ்ரி நைஸ் தெரிவித்துள்ளார்.

நாம் நிச்சயமாக எல்லா விடயங்களையும் ஆய்வு செய்வோம். ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையையும் ஆராய்வோம். அதில் வேறுபாடுகள் இருந்தால், அதுபற்றி இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவத்

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தக் குற்றச்செயல் விசாரணை அரசின் நிலையில் மாற்றம் ஏன்?



### கேள்வியெழுப்புகிறது ஐ.தே.க.

யுத்தக் குற்றச்செயல் விசாரணை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூவர் அடங்கிய சர்வதேச நிபுணர் குழு ஒன்றினை நியமித்துள்ளார். பிரித்தானியாவின் சட்ட வல்லுநர் சேர் டெஸ்மன் டி சில்வா தலைமையிலான மூவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## நியதிச்சட்டவரைபுக்கான அங்கீகாரத்தை அளித்தார் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நியதி சட்டவரைபுகளை ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அங்கீகரித்துள்ளார். நேற்றையதினம் இதனை அங்கீகரித்த ஆளுநர் அதனை வடமாகாண சபைக்கு அனுப்பி வைத்துள்ளதாக ஆளுநர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற வடமாகாணசபை அமர்வின் போது வடமாகாண சபையின் நியதிச் சட்ட வரைபுக்கான நிதி ஆணைக்குழு மற்றும் சட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தக்கூடாது



(கொழும்பு)

### பா.ஜ.க. சிரேஷ்ட தலைவர் தெரிவிப்பு

கொழும்பிற்கும், இலங்கையிலுள்ள தமிழர்களுக்குமான பிரச்சினை உள்நாட்டு விவகாரமாகும். இதனை சர்வதேச மயப்படுத்துவதனை விடவும், இலங்கை, இந்தியா, இடையிலேயே சிறந்த முறையில் தீர்க்க முடியுமென இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பா.ஜ.க.வின் வெளிவிவகார கொள்கைப்பிரிவு தேசிய அமைப்பாளரும் பா.ஜ.கவின் தேசிய நிறைவேற்று உறுப்பினருமான கலாநிதி சேசாத்ரி சாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும தெரிவிக்கையில்,

இந்திய வெளிவிவகாரக் கொள்கை மத்திய அரசுக்கு ஒதுக்

19 ஆம் . பக்கம் பார்க்க

## வடபகுதி கடற்பரப்பில் 38 இந்திய மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எழுவைதீவு, மற்றும் தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவேளை இவர்கள் நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களது 10 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. எழுவைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 18 மீனவர்களும் நேற்றுக்காலை காங்கேசன்துறையில் வைத்து யாழ். கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் செ.லெனின்

19 ஆம் பக்கம் பார்க்க

## இயற்கை வெளிச்சத்தில் நடமாட அகதிகளுக்கு 3மணிநேரம் மட்டும்

### ஒப்புக்கொண்டது அவுஸ்ரேலியா

அவுஸ்ரேலிய சுங்கக் கப்பல் ஒன்றில், தடுத்து வைக்கப்பட்டுள்ள 157 தமிழ் அகதிகளும் நாளொன்றுக்கு 3 மணித்தியாலங்கள் மட்டும், இயற்கை வெளிச்சத்தில் நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளதாக, அவுஸ்ரேலிய அரசு தெரிவித்துள்ளது.

இந்த அகதிகள் தொடர்பான வழக்கு நேற்று மெல்பேர்னில் உள்ள நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, அவுஸ்ரேலிய குடிவரவு, அமைச்சர் ஸ்கொட் மொறிசனின் அறிக்கை, அவரது சட்டவாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னதாக இந்தக் கப்பலில் 153 அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டிருந்தது. ஆனால், தற்போதைய அறிக்கையில் 157 தமிழ் அகதிகள் அதில் இருப்பதாகவும், அவர்களில் மூவர் ஆங்கிலத்தில் பேசக் கூடியவர்களாக இருப்பதால், மொழிபெயர்ப்பாளர்களாக செயற்படுவதாகவும், அவுஸ்ரே

19 ஆம் பக்கம் பார்க்க

# புதுக்குடியிருப்பில் கடும் வறட்சி நாளாந்தம் குடிநீர் விநியோகம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு பகுதியில் தற்போது நிலவும் கடுமையான வறட்சி காரணமாக நேற்று முன்தினம் முதல் நாளாந்தம் 28 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் எஸ். மிதிலைநாதன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் குடிநீர் தற்போது தேவைப்படும் மந்துவில், மல்லிகைத்தீவு ஆகிய பகுதிகளுக்கும் ஆனந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியவற்றிற்கு நேற்று முன்தினம் முதல் 28 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

இதற்கான நிதியினை முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வழங்குவதாகத் தெரிவித்தார்.

இதனைவிட, ஏற்கனவே ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை, விசுவமடு பொதுச்சந்தை என்பவற்றுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை 16 ஆயிரம் லீற்றர் குடிநீரும், வித்தியாபுரம், சின்னச் சாளம்பன், பெரிய சாளம்பன் ஆகிய கிராமங்களுக்கு 8 ஆயிரம் லீற்றர் குடிநீரும் பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள்களில் குறுக்கு வீதிகளில் பயணம்

### விபத்துகள் ஏற்படும் அபாயம்

(சுன்னாகம்)

ஏழாலைப் பகுதியில் குறுக்கு வீதிகள், குச்சொழுங்கைகள ஊடாக மோட்டார் சைக்கிள்களில் சவாரி செய்யும் இளைஞர்களால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக காலை, நண்பகல், மாலை நேரங்களில் பாடசாலை ஆரம்பமாகும், முடிவடையும் நேரங்களில் தலைக்கவசம் அணியாது ஒரு மோட்டார் சைக்கிளில் மூன்று அல்லது நான்கு பேர் அமர்ந்து மிக வேகமாகச் செல்வதால், பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் பயணிகள் விபத்துக்குள்ளாவதுடன் சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர்.

குறுக்கு வீதிகள், சிறு வீதிகளில் இவ்வாறு வேகமாகச் செல்வதால் வீடுகளில் இருந்து வெளியே வருவோர் திடீரென விபத்தைச் சந்திக்கின்ற நிலை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் ஏழாலை, மயிலணிப் பகுதியில் ஆசிரியர் ஒருவர் இவ்வாறு விபத்தில் சிக்கியமையும் குறிப்பிடத்தக்கது. (66)

## விடுமுறை வழங்க கோரிக்கை

(யாழ்ப்பணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆடி அமாவாசை தினத்தினை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் விரதம் அனுஷ்டிக்கும் வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி உதவுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்கிறது.

## உதவி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

'கருவி' எனப்படும் மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தினரின் வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்.வணிகர் கழகம் அலுவலக தளபாடங்களை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான நிகழ்வு நாளை பிற்பகல் 4.00 மணிக்கு இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது என யாழ்.வணிகர் கழகத்தின் செயலாளர் இ. ஜனக்குமார் அறிவித்துள்ளார்.

## வருடாந்த மஹோற்சவம்

(வரணி)

புத்தூர் மேற்கு அருள்மிகு ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறுகின்றது.

எட்டாம் திருவிழா சப்பறமும், ஒன்பதாம் திருவிழா தேரும், பத்தாம் திருவிழா தீர்த்தோற்சவமும் இடம்பெற்று பதினோராம் நாளான எதிர்வரும் 31 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

பகல் உற்சவம் 8.00 மணிக்கு ஆரம்பமாகி 12.30 மணிக்கு நிறைவடையும். இரவு உற்சவம் 5.00 மணிக்கு ஆரம்பமாகி 8.30 மணிக்கு நிறைவடையுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (150)

## கொடிகாமம்-பருத்தித்துறை வீதி புனரமைக்கப்படுவது எப்போது?

வடமராட்சியையும், தென்மராட்சியையும் இணைக்கும் மிகவும் முக்கியமான வீதியாகக் கொடிகாமம் - பருத்தித்துறை வீதி விளங்குகின்றது. இவ் வீதியானது பல வருடங்களாகத் திருத்தப்படாமல் இருப்பதனால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருப்பதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கடலுணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள் முதலானவற்றை தென்பகுதிக்கும், தென்பகுதியில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை வடமராட்சிக்கும் கொண்டு செல்வதற்கு இவ்வீதியே பயன்படுகின்றது.

வடமராட்சிப் பகுதியில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கடமையாற்றும் அரச அலுவலர்கள், வியாபாரிகள், பொது மக்கள் என தினமும் ஏராளமானவர்கள் பயன்படுத்தும் இவ்வீதியை உடனடியாகத் திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன நடவடிக்கை எடுக்க வேண்டுமென இவ்வீதியைப் பயன்படுத்துவோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## வறுமையில் ஆறு பிள்ளைகளுடன் வாழ்ந்த குடும்பத்திற்கு உதவி



வவுனியா தாலிக்குளம் கிராமத்தில் கணவனை இழந்து வாழ்ந்து வந்த பெண்களின் குடும்பத்திற்கு வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் நேற்று முன்தினம் மூன்று பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதற்கு தேவையான கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள், உணவுப்பொருட்கள் போன்றவற்றை முதல்கட்டமாக வழங்கியது.

இக் குடும்பத்தின் வாழ்வாதாரத்தினைப் பெருக்குவதற்கு சிறு தொழில் ஒன்றையும் உருவாக்கி தருவதாகவும் ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார். கடந்த 17.05.2014 அன்று வயல் வேலைக்குச் செல்லும் போது மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி இப்பெண்ணினது கணவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (70)

## பனை மரங்கள் தறிப்பு

(முகமாலை)

முகமாலை தெற்குப் பகுதியில் மக்கள் மீள்குடியேறாத பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டு வேறு இடங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

மக்கள் மீள்குடியேற்றப்படாத பகுதியில் மேற்படி பனை மரங்கள் தறிக்கப்பட்டமை குறித்து அப்பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1076

திகதி 21.07.2014

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

13 39 46 47 K

ஜக்பொட் பரிசு ரு. 3,41,32,440/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,41,32,440/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 4,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 268 | 1,000/= | ரூ. 2,68,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 449 | 1,000/= | ரூ. 4,49,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11957 | 60/= | ரூ. 7,17,420/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6276 | 40/= | ரூ. 2,51,040/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156858 | 20/= | ரூ. 31,37,160/= |
| ஆங்கில எழுத்து | 22795 | 20/= | ரூ. 4,55,900/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 66,78,520/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 34,439,140/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.24 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)


## கோப்பாய் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தீவிரம்

(திருநெல்வேலி)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் பொலிஸார் மற்றும் பலர் இதன் போது பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக இருந்த காணிகள், வீடுகளின் உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு மேற்படி உத்தியோகத்தர்களினால் எச்சரிக்கை செய்யப்பட்டதோடு, தொடர்ந்தும் நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்ளத் தவறினால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பல இடங்கள் சோதனையிடப்பட்டன. மழை காலம் இல்லாத் நிலையிலும், டெங்கு நோய் சிலருக்குக் காணப்படுவதனால் பொது மக்கள் இது சம்பந்தமாக மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், தொடர்ந்து காய்ச்சல் காணப் பட்டால் தாமதிக்காது உடன் வைத்தியரை நாடுமாறும் கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (137)

## மடம் புனரமைப்பு

கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் இலங்கை நாயகி அம்மன் கோவிலுக்கு முன்பாகவுள்ள மடம் புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 500 ரூபாவை வீதி அபிவிருத்தி அதிகாரசபை நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கியிருந்தது. திருத்த வேலைகளை கல்வியங்காடு இலங்கை நாயகி சனமூக நிலையம் மேற்கொள்வதற்கு நல்லூர் பிரதேசசபை அனுமதி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (137)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்.
சிவலிங்கப்புளியடி.
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)

# அதிகூடிய விலைகளில் கூ.சங்கத்தில் அரிசி விற்பனை


(மானிப்பாய்)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு உட்பட்ட நவாலி பிரதேசத்தில் அமைந்துள்ள ப.நோ.கூ. சங்கக்கிளைகளில் விலைப்பட்டியலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலைகளை விட அதிகளவு விலைகளில் பொருட்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் விற்கப்படுகின்றன.

குறித்த கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விலைப்பட்டியலில் குத்தரிசி 66 ரூபா என காணப்படுகின்ற போதிலும் அப்பிரதேச கிளைகளில் 66 ரூபா குத்தரிசி இல்லை எனவும் 85 மற்றும் 90 ரூபா பெறுமதியான குத்தரிசி மட்டுமே உள்ளது என முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பொதுமக்கள் தாம் ஏமாற்றமடைவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்மந்தப்பட்டவர்கள் இதற்கு நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் நுகர்வோர் பாதிப்படைவதைத் தவிர்க்க முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (66)



இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையினரும் வடமராட்சி 2005 உயர்தர மாணவர் ஒன்றியமும் இணைந்து அல்வாய் பாரதிதாசன் நூலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததான நிகழ்வினை மேற்கொண்டனர். இந்த நிகழ்வில் 41 குருதிக்கொடையாளர்கள் குருதி வழங்கி நிகழ்வினை சிறப்பிப்பதனைக் காணலாம். (பா)

# சிவநெறிப்புரவலர் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

சைவமகாசபை, சைவநெறிக்கூடம் என்பன இணைந்து வழங்கும் சிவநெறிப்புரவலர் (சைவப்பிரச்சாரகர்) பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், சைவசமயம் ஆகியபாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் சைவஒழுக்கத்தில் நிற்பவர்களும் மனிதநேயம், ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடிப்போரும் இதற்குவிண்ணப்பிக்கமுடியும்.

இதில் பங்குபற்றுபவர்களுக்கு மதியபோசனம் இலவசமாக வழங்கப்படுவதுடன் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவச தங்குமிட வசதியும் வழங்கப்படும். ஆலயங்களில் பிரசாரம் மேற்கொள்ளவும் இல்லங்களில் வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்ளவும் வேலை வாய்ப்புக்கு உறுதிசெய்யப்படும்.

இந்தியாவில் மேற்படிப்பைத் தொடரவும் ஒழுங்குசெய்யப்படும். விசேடதிறனுடையவர்களுக்கு புலம்பெயர்நாடுகளில் பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது.

இதற்கு விண்ணப்பிக்கவிரும்புபவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சைவமகாசபை, கல்லூரிவீதி, கொக்குவில் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

மேலதிக விடயங்களை சைவமகாசபையின் இணைப்பாளரின் 077-8445805, 021-3203284 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

# எழுதுமட்டுவாழ் சந்தையை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு பகுதியில் அமைந்துள்ள சந்தையினை இயங்க வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த யுத்த கால சூழ் நிலையின் போது முழுமையாகச் சேதமடைந்திருந்த சந்தை பலமில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை இயங்கினால் எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, முகமாலை, இத்தாவில், கிளாலி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது மரக்கறி, பழவகைகள், கடலுணவுப் பொருட்களை விற்பனை செய்யமுடியும் எனவும் இச்சந்தை இல்லாத காரணத்தினால் 7 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கொடிகாமம், சந்தைக்கே செல்லவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி எழுதுமட்டுவாழ் சந்தையினை இயங்க வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# செயலமர்வு

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் தொழுநோய் தொடர்பான ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"யாழ்.மாவட்டத்தில் தொழுநோயின் தற்போதைய நிலை" என்னும் விடயம் பற்றி இச்செயலமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது.

# பொட்டு என்ற பொட்டம்மான் வைச்ச பொட்டு – 04



வடபுலத்தான் எழுதுவது...

பொட்டம்மானும் புலிகளும் பிரபாகரனும் இல்லாமற் போனதில சந்தோசப்படுகிற ஆட்கள் ஆராயிருக்கும் எண்டு சொல்லுங்கோ பாப்பம்.

சந்தேகமேயில்லை. கூட்டமைப்புக்காரர்தான்.

ஏனெண்டால், பொட்டம்மானும் பிரபாகரனும் புலிகளும் இருந்திருந்தால், இப்பவும் சம்பந்தன் அடிக்கடி கிளிநொச்சிக்குப் போய், காவலிருந்து, தமிழ்ச்செல்வனுக்கோ நடேசனுக்கோ அல்லது கழுத்தில சயனைட் குப்பியைக் கட்டியிருக்கிற 13 வயசுப்பெடியனுக்கோ சல்யூட் அடிச்சிருக்க வேணும்.

செல்வம் அடைக்கலநாதனும் சுரேஸ் பிரேமச்சந்திரனும் உரத்துக் கதைக்கேலாமல், தொண்டைக்குள்ளேயே வார்த்தைகளை அடக்கி விழுங்கியிருக்க வேணும்.

ஐங்கரநேசனோ, சிறிதரனோ, அனந்தியோ, குருகுலராஜாவோ, சிவமோகனோ அரசியற் பக்கமே தலைவைச்சிருக்க மாட்டினம். இதுக்குப் புலிகள் விட்டிருக்கவும் மாட்டினம்.

சர்வணபவன் கொழும்பை விட்டே வந்திருக்க மாட்டார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னும் சந்தாப்பணம் கட்டிக்கொண்டுதானிருந்திருப்பார்.

கஜதீபன், சயந்தன் போல இருக்கிற பெடியளப் புலிகள் பங்கர் வெட்டத்தான் விட்டிருப்பினம். ஆனால், புலிகளுக்கே தண்ணிகாட்டிப்போட்டு, அவுஸ்ரேலியாவுக்கோ இத்தாலிக்கோ இந்தப் பயல்கள் நீந்திப்போயிருப்பாங்கள்.

புலி இல்லையெண்டதால தாங்கள்தான் இப்ப தனிக்காட்டு ராஜாக்கள் எண்ட நினைப்புக் கனபேரிட்ட வந்திருக்கு.

புலிகள் இல்லையெண்டதால தாங்கள் எல்லாம் இப்ப பெரிய தமிழ்த்தேசியவாதிகள், தியாகிகள், புனிதர்கள், போராளிகள், தேசியத்தலைவர்கள், தளபதிகள் எண்ட நினைப்பு வேற.

புலிகள் இருந்திருந்தால் இப்பிடி ஆருக்கும் பயமில்லாமல் குத்துக்கரணம் அடிக்கலாமோ!

எல்லாத்துக்கும் மேல் றிலாக்ஸாக அரசியல் செய்யிறதுக்கு, 'பொட்டம்மானின்ரை டிப்பாட்டென்ற்' விட்டிருக்குமோ?

சிறிதரனை அவற்றை மச்சானே போட்டுத்தள்ளியிருப்பார்.

சரவணபவன் இப்பவும் வித்தியாதரன்ரை காலைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருந்திருப்பார்.

சத்தியலிங்கம், சிவாஜிலிங்கம் எல்லாம் பெட்டிப்பாம்பாகச் சுருண்டு கிடந்திருப்பினம்.

அதுக்காக இப்பிடி அலுவ செய்யிறதெல்லாம் சரியெண்டு நான் சொல்ல வரேல்ல. ஆனால், புலிகள் இருந்திருந்தால் இவை இப்பிடியா இருந்திருப்பினம்?

இல்லாட்டிக்கு புலிகளை வைச்சுக்கொண்டு அமிர்தலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்துவினமோ...?

புளொட் உமாமகேஸ்வரனுக்கும் பத்மநாபாவுக்கும் ரெலோ சிறிசபாரட்ணத்துக்கும் வணக்க நிகழ்வுகளை நடத்தலாமோ....?

பஸிலுக்கும் மகிந்தருக்கும் சந்திரசிறிக்கும் ஒரு முகம். புலம்பெயர் உறவுகளுக்கு ஒரு முகம். தமிழ் மக்களுக்கு ஒரு முகம் எண்டு பல முகங்களைக் காட்டலாமோ?

புலித்தேசியமும் பேசிக்கொண்டு, புலிகளால கொல்லப்பட்டவைக்கு அஞ்சலியும் செய்து கொண்டு, இரட்டை முகம் காட்டுகிற சங்கதிதான் நடந்திருக்குமோ...!

அமிர்தலிங்கத்தாற்றை நினைவு அஞ்சலி நிகழ்வைத் தமிழரசுக்கட்சி கொண்டாடுது. அமிர்தலிங்கத்தைக் கொண்டது புலிகள் எண்டதையும் கட்சித்தலைவர் மௌனம் கலைச்சு வெளிப்படுத்தியிருக்கிறார். அப்பிடியெண்டால்... புலிகளை வைச்சுப் பிழைப்பு நடத்திற அனந்தியும் சிறிதரனும் குருகுலராஜா, அரியரத்தினம், பசுபதிப்பிள்ளை, ரவிகரன், கஜதீபன் போன்ற ஆட்கள்தானே இண்டைக்கு இதுக்கு பதில் தரவேண்டிய ஆட்கள்? ஏன் வாய் திறக்காமல் பேசாமல் இருக்கினம்?

அமிர்தலிங்கத்தைப் புலிகள் கொண்டது சரியெண்டு சொல்லுகினமா? இல்லையெண்டால், புலிகள் செய்தது பிழையெண்டதை இப்பதான் தாங்கள் உணருகினம் எண்டு சொல்லுகினமா?

அப்பிடியெண்டால், இனிமேல் புலிகளை இவை ஆதரிக்க மாட்டினமா?

ஏனப்பா இப்பிடியெல்லாம் தமிழ்ச்சனத்தைப்போட்டு மடையர்களாக்கிறீங்கள்?

தமிழ்ச்சனங்களும் இதுகளைப் பற்றியெல்லாம் ஒரு நாளுமே சிந்திக்கிறேல்ல. இதுதானே இவைக்கும் (தமிழ்த்தேசியவாதிகளுக்கு) வசதியாய்ப்போச்சு.

இது சிந்திக்காத மக்களை வைச்சுக்கொண்டு, இனவாதத்தை வளர்த்து, வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம் எண்ட கள்ளச் சிந்தனை.

இப்ப பொட்டு வைக்கிறதுக்கு ஒரு பொட்டம்மான் இல்லையெண்டதால வந்த வினை இதெல்லாம்....

ஆனால், இவை நினைக்கலாம், அந்தப் பொட்டனுக்கே தண்ணி காட்டினனாங்கள் தானே... அதை விட வேற எதுக்குப் பயப்பிடோணும் எண்டு...

நடக்கட்டும் நாடகம். இந்த நாடகத்துக்கும் ஒரு முடிவு வரும்.

'எத்தினை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே... இந்த மக்களை....?'

'குள்ளநரிக்கூட்டத்தை விரட்டியடிப்போம்... அவர் கொட்டத்தை அடக்குவோம்....' எண்டு இந்தக் காலங்காத்தால ஆரோ ஒரு பெடியன் பாடிக்கொண்டு போறான்.

தமிழ்ச் சனத்துக்கு ஏதோ நல்ல சகுனம் போலதான் இருக்கு.

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.

- டெஸ்கார்ட்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தலைவர்கள் கோபப்படுகிறார்கள்...

"இவன் லொள்ளு தாங்க முடியலைப்பா" என்று செந்திலைப் பார்த்து கவுண்டமணி அடிக்கடி சலித்துக் கொள்வாரல்லவா! அது போலத்தான் தங்கள் நிலைமைக்கு மீறிய வாய்ச் சவடால்களால் கூட்டமைப்புத் தலைவர்களும் அடிக்கடி மக்களை சலித்துக்கொள்ள வைக்கிறார்கள்.

"ஞானப் பழத்துக்கு கொட்டை இருக்கா?", "நீங்க பத்தாம் வகுப்பு ∴பெயில் அண்ண, நான் அஞ்சாம் வகுப்பு பாஸ்... பாஸ் பெரிசா ∴பெயில் பெரிசா?", "அந்த மற்ற வாழைப்பழம்தான் அண்ண இது!" என்று கவுண்டமணியைக் குழப்பிவிடும் செந்திலைப் போலவே கூட்டமைப்பு எம்பிக்களும் தங்களது தில்லாலங்கடி அறிக்கைகளால் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் வெளியான இந்த, பத்திரிகைத் தலைப்புச் செய்தியைப் படித்துப் பார்த்தீர்களானால், சிரிப்பை உங்களால் அடக்க முடியாது. இந்திய அரசு வெலவெலத்துப் போகும்படியான அதேசமயம் தமிழ் மக்கள் தங்கள் தலைவர்களின் வீரத்தை நினைந்து புல்லரிக்கும்படியான ஒரு மகா மிரட்டல்!

அவர்களது கட்சிப் பத்திரிகையிலேயே வந்திருக்கும் இந்திய நாட்டுக்கான அந்த அறைகூவல் செய்தி இதுதான்:

"இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் தமது இருப்பையும் – பாதுகாப்பையும் – தனித்துவத்தையும் தக்க வைக்க, தமக்கே உரித்தான உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள – தமக்கு ஆதரவளிக்கும் சக்திகளுடன் இணைந்து செயற்படும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்." என்கிறது செய்தியின் முதல் பந்தி.

"வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றாவிட்டால் போராட்டம் வெடிக்கும்", "அரசாங்கம் எங்களை அலட்சியப்படுத்தினால் சர்வதேசம் வந்திறங்கும்", "மரியாதையாக அரசாங்கம் தீர்வை முன்வைக்காவிட்டால் சர்வதேச விசாரணையில் கொண்டுபோய் நிறுத்துவோம்" என்று எச்சரிக்கை மேல் எச்சரிக்கை விடுத்து இலங்கை அரசை நடுங்க வைத்தது போலவே, இப்போது இந்திய அரசுக்கு எச்சரிக்கை பறந்திருக்கிறது!

தலைவர்கள் என்றால் சும்மாவா? அனல் கக்கும் பேச்சில் சில பல மண்டைகள் உருள வேண்டியது சகஜம்தானே! வல்லரசு நாடுகளையே வாயால் நடுங்க வைக்கும் நம் தங்கத் தலைவர்களின் வீரம் கண்டு, வீடின்றி வசதிகளின்றி அரைகுறை வயிறுகளுடன் சுருண்டுகிடக்கும் தமிழரெல்லாம் நெஞ்சு நிமிர்த்திச் சிலிர்த்தெழ வேண்டாமோ?

அடுத்த வருட ஜெனீவாவில் சரியான தீர்மானத்தை நிறைவேற்றாமல் சொதப்பினால் அடுத்த சீற்றமிகு எச்சரிக்கை தன்னை நோக்கி வரும் என்பது அமெரிக்காவுக்கு இப்போது விளங்கியிருக்கும். அதற்கடுத்து நம் தமிழ்த் தலைவர்களிடமிருந்து வரப்போகும் எச்சரிக்கை குறித்து ஐ.நா. இப்போதே கவலைப்பட ஆரம்பித்திருக்கும்.

நம் தலைவர்களின் மிரட்டலில் இலங்கை அரசாங்கம் மட்டுமல்லாமல் இப்படி உலக நாடுகளும் ஒவ்வொன்றாக கலங்குவது குறித்து தமிழன் பெருமைப்படாமல் இருக்க முடியுமா? தமிழர்களுக்குத் தலைவர்கள், தேர்தல் வாக்குறுதிகளுக்கு அடுத்தபடியாகத் தந்துகொண்டிருப்பது இத்தகைய பெருமைகளும் புல்லரிப்புகளும் தானே!

அதுசரி, நம் சிங்கங்களுக்கு இந்தியாவோடு என்ன திடீர்க் காய்ச்சல்? பதவிக்கு வந்து சில மாதங்களாகியும் மோடி இன்னும் இவர்களைக் கண்டுகொள்ளவில்லை கோவமா? பாவம் இவர்களைக் கூப்பிட்டு ஒரு போட்டோவையும் எடுத்து அனுப்பிவைத்தால் தான் என்னவாம்?

அடுத்த ஜெனீவாக்கு இடையில், "இலங்கை அரசாங்கம் கதிகலங்குகிறது" என்பதைச் சொல்லி நம் தலைவர்கள் தமிழ்மக்களைத் தாக்காட்டுவதற்கு இந்நேரத்தில் இந்தியப் பிரதமர் மோடி ஒரு வாய்ப்புத் தரக்கூடாதா?

- ஆசிரியர்.

# அதிவேக பாதை மூலம் 4500 கோடி வருமானம்

தெற்கு மற்றும் கட்டுநாயக்கா அதிவேக பாதை மூலம் 4500 கோடி ரூபா அரசாங்கத்துக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது என நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் கப்பல்துறை கருத்திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளாா.

தெற்கு அதிவேக பாதை திறக்கப்பட்டது முதல் இது வரையிலான காலத்தில் 3300 கோடி ரூபாவும் அதேபோன்று கட்டுநாயக்க அதிவேக பாதை மூலம் 1200 கோடி ரூபாவும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா அதிவேக பாதை 2013 ஒக்ரோபர் 27ஆம் திகதி திறக்கப்பட்டது. அன்றிலிருந்து இதுவரை 1200 கோடி ரூபாவை வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் இதனூடான வருமானம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் அதிவேக பாதையை உபயோகப்படுத்துவது அதிகரித்து வருவதால் வருமானமும் அதிகரித்து வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், வார இறுதி நாட்களில் தெற்கு அதிவேக பாதையின் வருமானம் அதிகரிப்பதுடன் அது ஏழு மில்லியனைத் தாண்டுவதாகவும் வார இறுதி நாட்களில் தமது ஊர்களுக்குச் செல்வோரில் 20,000 பேரின் வாகனங்கள் தெற்கு அதிவேக பாதையூடாகவே பயணிப்பதாகவும் சுட்டிக் காட்டினார.

இதேவேளை இரத்தினபுரி-கொழும்புக்கிடையிலான அதிவேக பாதை மற்றும் வெளி சுற்று வட்டங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும், இவ்வருட இறுதிக்குள் இந்த நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# தபால் கட்டண அதிகரிப்பு குறித்து தீர்மானம் எடுக்கப்படவில்லை

## - தபால்மா அதிபர் தெரிவிப்பு -

(கொழும்பு)

தபால் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து இன்னும் தீர்மானமில்லை என தபால்மா அதிபர் அபேரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்படலாம் என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ள போதிலும் இது தொடர்பாக இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

தபால் கட்டணங்களில் மாற்றம் கொண்டுவருவது குறித்து அறிக்கை ஒன்று தற்சமயம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அமைச்சரவை அனுமதி கிடைத்த பின்னர் இது குறித்து அரச வர்த்தமானியில் வெளியிடப்படும். அதனையடுத்தே கட்டணங்களில் மாற்றம் கொண்டுவர முடியும் என்றார்.

# சுகாதார சேவைக்கு ஒதுக்கப்படும் நிதி குறைப்பு

## - இலங்கை தாதியர்சங்கம் குற்றச்சாட்டு -

(கொழும்பு)

சுகாதார சேவைக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை தாதியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம் பெற்ற செய்தியா ளர் சந்திப்பில் உரையாற்றிய அந்த சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க இந்தக்குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார். மொத்த தேசிய உற்பத்தியில் 2006ஆம் ஆண்டு 1.97 சதவீதம் சுகாதார சேவைக்காக ஒதுக்கப்பட்டது

இருந்தபோதும், 2013ஆம் ஆண்டு 1.3 சத வீதமாக சுகாதார சேவைக்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.

தாதியர் மற்றும் குடும்ப நல மருத்துவ மாதுகளின் மகப்பேற்று பயிற்சிகள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து அரசாங்கம் தீர்வுகளை வழங்குவதில் அசமந்தப்போக்கை கடைப் பிடித்து வருகின்றது என்றார்.

இதேவேளை வேதன கொடுப்பனவு நிலுவை உட்பட்ட ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை அடையாள பணிப புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

தாதியர் சேவையைச் சேர்ந்த 27 தரங்களைச் சார்ந்த பணியாளர்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

எவ்வாறாயினும், மாத்தறை, பதுளை, பொலநறுவை உள்ளிட்ட பொது மருத்துவமனைகளிலும், ரிட்ஜ்வே அம்மையார் சிறுவர் மருத்துவமனை, காசல் மற்றும் டீ சொய்சா மகப்பேறு மருத்துவமனைகள், மஹரகம புற்றுநோய் மருத்துவமனை மற்றும் பேராதனை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சிறுவர் மருத்துவமனை ஆகியனவற்றில் பணிப்புறக்கணிப்பு இடம்பெறவில்லை.

# மலேசியா அனுப்புவதாகக் கூறி பணமோசடி செய்தவர் தலைமறைவு

மலேசியாவுக்கு அனுப்புவதாகக் கூறி 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை மோசடி செய்ததாக நல்லூரைச் சேர்ந்த சந்தேக நபரொருவருக்கு எதிராக நெல்லியடி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணமோசடியில் ஈடுபட்டவர் நல்லூர் பின் வீதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றினை நடத்தி வந்தவரெனவும் இவர் தற்போது தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸாா தெரிவித்தனர்.

யோகேஸ்வரன் மயூரன் (வயது - 28) என்ற இந்த சந்தேகநபருக்கு எதிராக வியாபாரிமூலை மற்றும் தொண்டைமானாறுப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் மாலை முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக நெல்லியடி குற்ற ஒழிப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களை மலேசியாவுக்கு அனுப்புவதாகக் கூறியே இவ்வாறு பணமோசடி செய்துள்ளதாக முறைப்பாட்டாளர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# சிறுவர் தொலைபேசி சேவையின் நான்காண்டு பூர்த்தி நாளை

(கொழும்பு)

இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையான 1929 சேவை அதன் நான்காண்டு சேவையை பூர்த்தி செய்கின்றது.

இதனை முன்னிட்டு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையில் தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இன்று காலை 10.00 மணிக்கு வைபவம் ஒன்று இடம்பெறவுள்ளது

அமைச்சின் செயலாளர் எரிக் இளையப் ஆரச்சி, தேசிய சிறுவர் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவி சட்டத்தரணி அனோமா திசாநாயக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதித்தலைவி சுஜாதா குலதுங்க ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# புதியதோர் உலகம்

அண்மையில் நோர்வேயில் இருந்து வந்திருந்த நண்பரொருவரை சந்தித்தேன். வடக்கில் நடந்த அரசியல் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்றில் அவரை சந்தித்தேன். யாரோ அறிமுகமான ஒருவருடன் வந்திருக்கிறார் என நினைக்கிறேன். அவரது நடையில் ஒருவிதமான மிதப்பை உணர்ந்தேன். ஒரு பழுத்த அரசியல் பிரமுகரைப்போல அல்லது மிகப்புகழ் வாய்ந்த போராளியையொத்த ஒரு தோரணை.

கால்பந்தென்றால், நான்றாக கால்பந்து ஆடுபவர்களுக்கும், கிரிக்கெட் என்றால் நன்றாக கிரிக்கெட் ஆடுபவர்களுக்கும் தானே மரியாதை. அதுபோல, அரசியலரங்கிலும் முதல் மரியாதை பழம் தின்று கொட்டை போட்டவர்களுக்கும், மிகத் தீவிரமான அர்ப்பணிப்பினால் புகழடைந்த போராளிகளுக்கும் ஒரு மரியாதை இருக்கத்தானே செய்யும். அவர்களும் மற்றவர்களிடம் கௌரவத்தை வேண்டும் ஒருவிதமான பாவனையுடன் நடப்பார்கள்.

சந்திப்பில் அவர் நிறையப் பேசினார். எல்லா விடயங்களிலும் எல்லோரையும் சிலுவையில் ஏற்றினார். தற்போதைய நிலையில், தமிழ்த்தரப்பினால் வெகுஜன இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாத நிலை பற்றிய பேச்சு வந்தது. நாட்டிலுள்ள, புலம் பெயர்ந்த, இந்தியாவிலுள்ள ஏன் நவுறு தீவுகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களையும் உள்ளடக்கி, உலகத்திலுள்ள ஒரு தமிழனையும் மிச்சம் விடாமல் எல்லோரையும் குற்றவாளியாக்கினார். உலகத்தின் மூலை முடுக்குகளிலுள்ள அத்தனை தமிழ் அரசியல்வாதிகளையும் குற்றம் சொன்னார்.

**யூதர்கள் தங்களுக்கென ஒரு நாடு உருவாக்க வேண்டும் என்றதும், உலகெங்குமிருந்து இஸ்ரேலை நோக்கி படையெடுத்துச் சென்றார்கள். மாறாக இலங்கையில், ஈழத்தமிழர்கள் தங்களுக்கென ஒரு நாட்டை உருவாக்க வேண்டுமென மிகக்குறிப்பிட்ட எண்ணிக்கையான இளைஞர்கள் போராடப் புறப்பட்ட சமயத்தில், அதனை சாக்காக வைத்து பெரும்பாலானவர்கள் அங்கிருந்து தப்பி வெளியேறினார்கள். இந்த இயல்பின் அடிப்படையிலேயே மிகுதி அனைத்தையும் மதிப்பிட்டு விடலாம்.**

## அப்பாத்துரை அபூபக்கர் கட்டுரையிலிருந்து

கலந்துரையாடலின் முடிவில் அவருடன் பேசினேன். அவர் தன்னையொரு இடதுசாரியென அறிமுகப்படுத்தினார். இன்றைய திகதியில் இலங்கையில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கையை விட மிக அதிகமான இடதுசாரி பிரிவுகள் இலங்கையில் உள்ளன, அவர் எந்தப் பிரிவு என்றேன். நோர்வேயில் வசிப்பதாக கூறினார். இலங்கையில் எந்த இடதுசாரி கட்சியுடனும் தொடர்பில்லை என்றார். ஆச்சரியமாக இருந்தது.

அவர் இந்த உலகத்தை மாற்றியமைக்க தனித்து நிற்கும் போராளியாம். அதற்காக முகப்புத்தகத்திலும், தனது வலைப்பக்கத்திலும் தொடர்ந்து இடைவிடாமல் எழுதிக் கொண்டிருக்கிறேனே, பார்ப்பதில்லையா என்றார். இல்லையென்றால் கொன்றுவிடுவார் போலிருந்தது. பார்ப்பேன், அது நீங்கள்தானா என சும்மா கேட்டேன்.


தமிழில் முகப்புத்தகத்தில் தீவிரமாக இயங்குபவர்களை குறித்து, அண்மைய சில காலமாகவே பேஸ்புக் போராளிகள் என்ற சொற்பதம் ஒருசாரரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பேஸ்புக் தவிர்த்து, வலைத்தளங்கள், வேறு சமூக வலைத்தளங்களிலும் பலர் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் சேர்த்து இணையப்போராளிகள் என்றொரு சொற்றொடர் அண்மையில் புழக்கத்திற்கு வந்துள்ளது.

இந்த வார்த்தையைக் கேட்டதுமே, மேற்படியானவர்கள் எல்லோரும் சட்டென பதகளித்து கொண்டு

**புலிகளுடன் எல்லாக்கூத்தும் ஆட முடியாது. கொஞ்சம் பேச்சு மாறினாலே முகம் மாறிவிடுவார்கள். இணையம் அப்படியல்ல. அது போன மாசம். இது இந்த மாசம் என்ற கணக்கில் ஒடிக் கொண்டிருக்கலாம். அப்படிப் பார்த்தால் ஈழத்தமிழர்களிற்கு போராட்டம் நடத்த புலிகளை விட, இணையம்தான் மிக வாய்ப்பான–சௌகரியமான வழி.**

விடுவார்கள். எல்லோருமே உடனே துனிசியாவில் அசேலம் அடிக்கிறார்கள். துனிசியாவிலும் இப்படித் தானாம். யாரோ ஒரு ஏழைக்கு நேர்ந்த கொடுமையை இணையம்தானாம் அம்பலப்படுத்தி அரபு வசந்தத்தை வீசவைத்தது. இணையத்தில் இயங்குபவர்களை கிண்டலடிப்பவர்கள், பேரினவாதிகளின் கைக்கூலிகள் என்கிறார்கள்.

எல்லா சார்புகளையும் விட்டுவிட்டு, நமது சூழலில் இணையத்தினால் ஏதாவது மாற்றங்களைக் காண முடியுமா என்பதை நாம் விலாவாரியாக அலசிப்பார்க்க வேண்டும். ஏனெனில், உலகத்தின் கணிசமான கல்வியறிவைக் கொண்டவர்களில் தமிழர்களும் உள்ளனர். நவீன விஞ்ஞான, தொழில்துறை கண்டுபிடிப்பு அறிவுப்பரம்பல் தமிழ்ச்சமூகத்திற்குள் சமச்சீராக பரவியுள்ளது என்று சொல்ல முடியாதுதான். ஆனால்



தொழில்நுட்ப சாதனங்களின் பாவனை- குறிப்பாக இணைய ஊடாட்டம் மிகுந்த இனமாகத்தான் ஈழத்தமிழர்கள் உள்ளனர்.

அலாஸ்காவில் நடக்கும் சம்பவமொன்றை அடுத்த நொடியிலேயே அல்லைப்பிட்டியிலுள்ளவர்களும் அறிந்து கொண்டு விடுகிறார்கள். நம்மிடம் ஒரு புரட்சியை அல்ல ஓராயிரம் புரட்சிகளைத்தூண்டவல்ல இணையப்பரம்பல் உள்ளது.

ஆனாலும் தமிழ்ச்சமூகத்தை இந்த சமூகவலைத்தளங்களினால் அசைத்துப்பார்க்க முடிந்ததா? நந்திகடலோரம் உயிருக்காக இறைஞ்சிக் கொண்டிருந்த நமது பெண்களுக்காக ஒரு கண்ணாலும், எயார் ரெல் சுப்பர் சிங்கரில் முதலிடத்தைப் பறிகொடுத்தவனுக்காக இன்னொரு கண்ணாலும் நாம் அழுது கொண்டிருப்பவர்கள். நமது இணையபாவனை வரலாற்றை மிக நன்றாக இன்னொருதரம் மீட்டிப்பார்ப்போம்.

சரணடைந்த சிலர் சுட்டுக் கொல்லப்பட்ட காட்சிகள் வெளியானபோது, பெரும்பாலான தமிழ்ப்பாவனையாளர்கள் அதனை பார்த்தார்கள். முக்கால்பங்கிற்கும் மேற்பட்டவர்கள் அழுகைக்குறியையாவது சமூக வலைத்தளங்களில் நிலைத்தகவலிட்டார்கள். பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த துயரம் ஒரு தமிழ் வசந்தத்தை உருவாக்கவில்லை. மாறாக சில தன்னெழுச்சிகளைத்தான் உருவாக்கியது. புலம்பெயர்ந்த இடங்களிலும், தமிழகத்திலும் ஓரிரண்டு மரணங்களை சம்பவிக்க வைத்தன. கொஞ்சப்பேரை இரண்டு மூன்றுதரம் ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டியது. இலங்கையில் ஒரு தமிழ்வசந்தத்தை ஏற்படுத்தாமல், உலகத்தின் சில மூலைகளில் கொஞ்ச ஆர்ப்பாட்டக் கோஷங்களைத் தான் எழுப்பியது.

அதிகபட்சமாக ஒருவாரம் நீடித்திருக்குமா இந்த பிலாக்கணம்? பின்னர் எல்லாம் வழமைக்கு திரும்பின. அதன் பின், இதே அழுகையுடனும் தீவிரத்துடனும் தென்னிந்திய தொலைக்காட்சிகள் நடத்தும் சில நிகழ்ச்சிகளின் சம்பவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இதுதான் தமிழர்களின் இணையச்சூழல். இதன் வரையறைகளை நன்றாக விளங்கிக் கொண்டால், அதீதமான கற்பனைகளிருந்து விடுவித்து நம்மை தரையில் கால்பதிக்க வைக்கும்.

உண்மையில் தமிழர்களுக்கு இணையம் ஒரு சாபமென்றுதான் சொல்ல வேண்டும். ஆயுதங்கள் வைத்திருப்பது மட்டும்தான் போராட்டமென்றோ, அல்லது ஆயுதவழிதான் பயனுள்ள வழியென்பதோ இந்த கட்டுரையாளரின் வலியுறுத்தலல்ல என்பதை ஆரம்பத்திலேயே வலியுறுத்திவிட்டுத்தான் மேலே சில விடயங்களை சொல்ல விரும்புகிறேன்.

இணையவழித் தூண்டல்களின் மூலமாகட்டும், நேரடிப் பிரச்சார தூண்டல்களின் மூலமாகட்டும், தன்னெழுச்சிகளின் மூலமாகட்டும் ஒரு புரட்சியை அல்லது போராட்டத்தை முன்னெடுப்பது அந்தந்த சமூகங்களின் இயல்பை அல்லது மனநிலையைப் பொறுத்தது. இதுவும் காதலைப் போலத்தான். சில பூக்கள் சட்டென பூப்பதும், சில இரும்புகளில் எவ்வளவுதான் அறைந்தாலும் அது அசைந்து கொடுக்காததைப் போலவும் இதனை கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்களிடம் பல காலமாகவே ஒரு வழக்கு உள்ளது. யூதர்களுடன் தங்களை கற்பனையாக இணைத்துப் பார்த்து சுயஇன்பம் அனுபவித்துக் கொள்வார்கள். யூதர்கள் தங்களிற்கென ஒரு நாடு உருவாக்க வேண்டும் என்றதும், உலகெங்குமிருந்து இஸ்ரேலை நோக்கி படையெடுத்துச் சென்றார்கள்.

மாறாக இலங்கையில், ஈழத்தமிழர்கள் தங்களிற்கென ஒரு நாட்டை உருவாக்க வேண்டுமென மிகக்குறிப்பிட்ட எண்ணிக்கையான இளைஞர்கள் போராடப் புறப்பட்ட சமயத்தில், அதனை சாக்காக வைத்து பெரும்பாலானவர்கள் அங்கிருந்து தப்பி வெளியேறினார்கள். இந்த இயல்பின் அடிப்படையிலேயே மிகுதி அனைத்தையும் மதிப்பிட்டு விடலாம்.

இது சாதாரண மக்களிற்கு மட்டுமுரிய மன இயல்பல்ல. போராளிகளாக அரசியல்வாதிகளாக உள்ள அனைவரையும் சேர்த்த ஈழத்தமிழர்களின் இயல்பு. இதனால்தான் இணையத்தில் தமிழர்களிடம் இத்தனை போராளிகளை, அறச்சீற்றக்காரர்களை, கலாசாரக்காவலர்களை, நாட்டாமைகளை உருவாக்கி வைத்துள்ளது.

இது ஈழத்தமிழ்களின் பொது இயல்பு. இன்னொரு விதமாக சொன்னால், ஈழத்தமிழர்களின் இந்த பொதுஇயல்புக்கு கிடைத்த வடிகால்தான் இணையம். துனிசியாவைப் போல, எகிப்தைப்போல ஒரு புரட்சியை கற்பனை பண்ணியபடி, இஸ்ரேலைப் போல ஒரு நாட்டின் உதயத்தை கற்பனை பண்ணியபடி, மேற்கின் சமூகப்பாதுகாப்பு மிக்க வாழ்க்கையை தமிழீழத்தில் பிரதிபண்ணி கற்பனை பண்ணியபடி வாழ்க்கை நடத்த இணையத்தைப் போன்ற ஒரு மார்க்கம் தமிழர்களுக்கு இதுவரை கிடைத்ததில்லை.

முன்னர், இப்படியொரு மார்க்கமாக பெரும்பாலானவர்களுக்கு புலிகள் இருந்தார்கள். அவர்களின் ஆசைகள் பலதை புலிகள் செயற்படுத்தியபோது, அவர்களை ஆதர்சமாக்கினார்கள். புலிகளுடன் நடப்பது கத்தியின் மேல் நடப்பதை போல. அவர்களுடன் எல்லாக்கூத்தும் ஆட முடியாது. கொஞ்சம் பேச்சு மாறினாலே முகம் மாறிவிடுவார்கள்.

இணையம் அப்படியல்ல. அது போன மாசம். இது இந்த மாசம் என்ற கணக்கில் ஓடிக் கொண்டிருக்கலாம். அப்படிப் பார்த்தால் ஈழத்தமிழர்களுக்கு போராட்டம் நடத்த புலிகளை விட, இணையம்தான் மிக வாய்ப்பான-சௌகரியமான வழி.

இன்னொரு விதமாக சொன்னால், ஈழத்தமிழர்கள் தமது பொறுப்புக்களில் இருந்து தப்பிக்க இணையம் தான் வடிகாலாக அமைந்துள்ளது. அவர்கள் எல்லோரிடமும் புரட்சி பற்றிய கனவுகள் உள்ளன. தமது சமூகத்தின் போராட்டத்திற்கான அவசியம் பற்றிய பிரக்ஞை உள்ளது. ஆனால் யதார்த்ததில் அதனை சாத்தியமாக்க முடியாமல் உள்ளது.

தமது நாளாந்த கடமைகள் எல்லாவற்றையும் முடித்து, சாப்பிட்ட பின்னர் மிகச்சாவகாசமாக வந்து கணினியை திறந்து அவர்கள் புதியதோர் உலகத்திற்குள் புகுகிறார்கள். அன்று காலை விடிந்ததில் இருந்து கணினித்திரைக்குள் சற்றுமுன் புகுந்ததுவரையான காலப்பகுதியில் அவர்கள் வாழ்ந்ததற்கு நேரெதிரான உலகமது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# பிரிவினைவாதத்தை தூண்டவில்லையென கூட்டமைப்பு கூறுவது முற்றிலும் பொய்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் பிரிவினைவாதத்திற்கு துணை போகவில்லை என கூட்டமைப்பு கூறுவது முற்றிலும் பொய்யானதாகும் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஒற்றுமையினை ஏற்படுத்தும் நோக்கில் இணக்கப்பாடொன்றினை நோக்கி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நகர்கின்றதெனில் அது வரவேற்கத்தக்க விடயமே. பிரிவினையினை தூண்டாத வகையில் தொடர்ந்தும் கூட்டமைப்பு செயற்படுமாயின் அதற்கு அரசாங்கம் ஒருபோதும் தடையாக நிற்காது.

புலிகளுடன் இணைந்து தனி நாட்டுக் கோரிக்கைக்காக போராடியது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே. இன்று நாட்டை பிரித்துத் தருமாறு கேட்கவில்லை என கூறுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் ஒற்றுமையினை ஏற்படுத்தும் நோக்கில் அமைதியை நோக்கி கூட்டமைப்பு நகர்கின்றதெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கருத்தில் உண்மை இருப்பின் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். ஆனால் நாட்டில் பிரிவினைவாதத்தினை தூண்டும் வகையில் கூட்டமைப்பினர செயற்பட முனைகின்றனர்.

இந்த நாட்டில் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். வடக்கில் பிரச்சினைகள் இல்லை என நாம் கருதவில்லை. வடக்கில் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. சிங்கள மக்களுக்கும் சிக்கல்கள் உள்ளன. அவை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

அதேபோல் தமிழத்தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில கோரிக்கைகளில் நியாயம் உள்ளது. அவற்றினை ஏற்றுக்கொள்கிறோம். அதேபோல் பல விடயங்களில் அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் முரணான வகையிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது.

அதேபோல் நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் மிகக் கவனமாகச் செயற்பட்டு வருகின்றது. தேசிய பாதுகாப்பினை சீர்குலைக்கும் வகையில் கூட்டமைப்பு செயற்படுமாயின் அதற்கு ஒரு போதும் நாம் இடமளிக்கமாட்டோம்.

எனினும், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதையே செய்கின்றது. சர்வதேச அமைப்புக்களுடனும் புலம்பெயர் இயக்கங்களுடனும் இணைந்து தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான பல விடயங்களை இவர்கள் செய்து வருகின்றனர் என்றார்.

# உளவியல் ரீதியாகப் பாதிப்பு கணக்கெடுப்பு விரைவில் ஆரம்பம்

நாட்டில் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான கணக்கெடுப்பினை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதே இந்தக் கணக்கெடுப்பின் நோக்கம் என, சுகாதார அமைச்சின் உளவியல் சுகாதார பிரிவின் பணிப்பாளர், விஷேட வைத்தியர் ரசங்ஜிலி ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

நாடு பூராகவும் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

# சீனி இறக்குமதி தீர்வை 3 ரூபாவால் அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு விதிக்கப்படும் வர்த்தக பொருட்களுக்கான சிறப்பு வியாபார பண்டத்தீர்வை 3 ரூபாவினால் நேற்றுமுன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கிலோ ஒன்றுக்கு ரூபா 25 ஆக காணப்பட்ட தீர்வை, 28 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

# புதிய சர்வதேச வங்கி அமைக்கும் முயற்சிக்கு பாராட்டு

(கொழும்பு)

புதிய சர்வதேச அபிவிருத்தி வங்கி ஒன்றினை ஸ்தாபிப்பதற்கு பிரிக்ஸ் தலைவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இது சிறந்த உறுதுணையாக இருக்கும் என அவரின் டுவிட்டர் செய்தி குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.


பிரேசிலில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் இந்தப் புதிய வங்கி ஸ்தாபிப்பது குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரேசில், ரஸ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் பிரிக்ஸ் உறுப்பினர்கள் 100 பில்லியன் அமெரிக்க டொலர் மூலதனத்துடன் இந்த வங்கியை ஆரம்பிக்கவுள்ளனர்.

வங்கியின் முதல் ஆளுநராக இந்தியப் பிரஜை ஒருவர் செயற்படும் அதேவேளை இதன் தலைமையகம் சீன ஷெங்காயில் அமையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மதவழிபாட்டு முறையை மாற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட முடியாது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு



(கொழும்பு)

மத வழிபாட்டு முறைகளை மாற்றிக்கொள்ளுமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிட முடியாது என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தாம் விரும்பிய மதத்தை வழிபடவும், மதக் கலாசார விழுமியங்கள் மற்றும் மரபுகளை பின்பற்றவும் நாட்டின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் சகல உரிமைகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான ஓர் பின்னணியில் உச்ச நீதிமன்றினால் கூட மத வழிபாட்டு விவகாரங்களில் உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது.

முன்னேஸ்வரம் ஸ்ரீபத்ர காளி அம்மன் கோயில் மிருக பலி பூஜைகளைத் தடை செய்யுமாறு கோரி சில அமைப்புக்கள் தாக்கல் செய்திருந்த மனு தொடர்பிலான விசாரணைகளின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜாதிக சங்க சம்மேளனம் மற்றும் மிருக வதைகளை ஒழிக்கும் அமைப்பும் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தன.

இதேவேளை, மிருக பலி பூஜைகளின் போது சில விடயங்களைக் கருத்திற் கொள்ளுமாறு பிரதம நீதியரசர் ஆலய பரிபாலன சபையினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மிருபலி பூஜைக்கான மிருகங்களின் எண்ணிக்கையை வரையறுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

பொதுவாக மிருகங்களின் எண்ணிக்கையை 300 முதல் 400 ஆக வரையறுக்குமாறும் கோரியுள்ளார்.

பொதுமக்கள் பார்வையிடும் திறந்த வெளியில் ஒரே தடவையில் அதிகளவான மிருகங்களைப் பலியிடாது, ஒன்றன் பின் ஒன்றாக மிருகங்களை பலியிடுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பில் இரண்டு தரப்பினரும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதே பொருத்தமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் மிருக பலி பூஜைகள் நடைபெற வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை ஆலயத்தில் மிருக பலி பூஜைகள் நடாத்தப்படவுள்ளன.

# குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தராதரம் பாராது தண்டனை

## சட்டமா அதிபர் உறுதி

(கொழும்பு)

அளுத்கம சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உரிய ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

அளுத்கம சம்பவங்களுடன் பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட ஞானசாரதேரருக்கு தொடர்பு இருப்பதாக சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பிலான உறுதியான ஆதாரங்களும் காணப்படுவதாக சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

குரோத உணர்வைத் தூண்டும் வகையில் ஞானசார தேரர் ஆற்றிய உரையினைத் தொடர்ந்தே அளுத்கம பேருவளை பிரதேசங்களில் பாரியளவில் வன்முறைகள் வெடித்தன என சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.



குற்றவியல் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து தண்டனை விதிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இதுவரையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் இதே வேளை, குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் பூர்த்தியடையாத நிலையில் எவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பது பொருத்தமாகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உரிய ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் எந்தப் பகுதியிலும் தேர்தல் விளையாட்டில் ஈடுபடத் தயார்

## ஐக்கிய சோஷலிசக் கட்சித் தலைவர் சூளுரை

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் எவ்வாறான சூழ்நிலையிலும் தேர்தல் விளையாட்டில் ஈடுபடத் தான் தயார் என ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தனக்கு சாதகமான முறையில் தேர்தல் ஆடுகளத்தை உருவாக்கி தேர்தல் நடாத்துகின்றது. இந்தப் போட்டியில் சுதந்திரக் கட்சியினதோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினதோ ஆதரவாளராக கடமையாற்றும் உத்தேசமில்லை. தேர்தல் நடாத்துவதற்காக ஜாதகத்தையும், நல்ல நேரத்தையும் மட்டுமன்றி அரசாங்கத்தின் நாடித் துடிப்பையும் சோதனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சில நாடுகள் கிரிக்கெட் விளையாட்டில் வெற்றியீட்ட ஆடுகளத்தை தங்களுக்கு சாதகமான முறையில் அமைத்துக் கொள்ளும். அரசாங்கமும் இவ்வாறு தனக்குத் தேவையான வகையில் தேர்தல் களத்தை அமைத்துக் கொள்கின்றது.

அரசாங்கத்தினால் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிவிட முடியாது. அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் நடவடிக்கை ஊவா மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. தேர்தலில் வெற்றியீட்ட முடியுமா என்ற அச்சம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தை தோற்கடிக்கும் முயற்சியில் ஈடுபடும் சக்திகளுக்கு ஆதரவளிக்கப்படும் என்றார்.

# கால்நடை வளர்ப்பை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்

## கால்நடை வளர்ப்போர் கோரிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச கால்நடைப் பண்ணையாளர்கள் தமக்குள்ள குறைபாடுகளையும், தேவைகளையும் சுட்டிக்காட்டி அவைகளை நீக்கி தமது கால்நடை வளர்ப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை சுகாதார உற்பத்தித்திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை கால் நடை வளர்ப்போர் அலுவலக பிரதேசத்தில் 980 இற்கும் அதிமான கால்நடைப் பண்ணையாளர்கள், கால் நடைப்பண்ணைகளை வைத்திருக்கின்றனர். இப்பிரதேச கால்நடைப் பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவேற்ற மூன்று கால்நடைவைத்தியர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால் இங்கு ஒரு கால்நடை வைத்தியரே பணியாற்றுகின்றார். இதனால் இங்குள்ள கால் நடைப் பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது எனவே இவ் அலுவலகத்திற்கு இன்னொருகால் நடை வைத்தியரையாவது நியமிக்கவேண்டும். அது மட்டுமன்றி இக்கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு வாகனம் ஒன்றில்லாமையால் கால்நடைப் பண்ணையாளர்கள் கால்நடைகளுக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவர்களது சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. எனவே இவ் அலுவலகத்திற்கு வாகன வசதி செய்யப்பட வேண்டும்

மேலும் இவ் அலுவலகத்தில் வெளியான இடத்தில் வைத்தே மேலும் கால்நடைகளுக்கான சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே இவ் அலுவலகத்தில் கால்நடைகள் சத்திரசிகிச்சைக் கூடமொன்றும் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

இங்குள்ள பாற்பண்ணையாளர்கள் உற்பத்திசெய்யும் மேலதிக பாலை, சேமிப்பதற்கான குளிரூட்டி வசதிகள் இங்கு இல்லை, எனவே இப்பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பாலைச் சேமிப்பதற்குரிய குளிரூட்டி வசதிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

மருதங்கேணி கால்நடை வளர்ப்போர் அலுவலகத்திற்கு கால்நடை வைத்தியரே இல்லை அவ் அலுவலகத்தில் ஒரே ஒரு உத்தியோகத்தர் மட்டும் கடமையாற்றிவருகின்றார். அவரால் கால்நடைகளுக்கான முழுமை யான சேவைகளை வழங்க முடியாது உள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போர் பலரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ் அலுவலகத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் பதில் கால்நடை வைத்திய அதிகாரி ஒருவர் கடமையாற்றி வந்தார்.


தற்போது அவரின் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே இவ் அலுவலகத்திற்கு நிரந்தர கால்நடை வைத்தியர் நியமிக்கப்பட வேண்டும். அலுவலக உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இப் பிரதேச மக்கள் யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்கள் எனவே இப்பாதிப்புக்குட்பட்ட மக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இப்பிரதேசங்களின் தேவைகள், குறைபாடுகள் போக்கப்படுவதன் மூலம் கால்நடைவளர்ப்புகள் மேம்பாடடையமுடியும என தெரிவிக்கப்பட்டுள்ளது.(01)

## தீர்த்தத்திருவிழா

யாழ்.ஸ்ரீமுனீஸ்வரன் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று காலை இடம்பெறவுள்ளதுடன் நாளை வைரவர் சாந்தி இடம்பெற்று திருவிழாக்கள் யாவும் இனிதே நிறைவு பெறவுள்ளன.

எனவே, அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் தீர்த்த உற்சவத்தை கண்டு கழிக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(85)

# வில்லுப்பாட்டு போட்டி யாழ்.இந்து முதலிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி வரலாற்றில் முதன் முறையாக தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டியில் வில்லுப்பாட்டில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

ஸ்ரீபாத தேசிய கல்வியியற்கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற தேசியமட்ட தமிழ்த்தினப்போட்டியில் யாழ். இந்துவின் வில்லுப்பாட்டுக்குழுவினர் "தக்கன்வதம்" என்ற வில்லிசையினை நிகழ்த்தி முதலிடத்தைப் பெற்றிருந்தனர்.

இக்குழுவினரை விமலநாதன், திருமதி.செல்வரத்தினம் ஆசிரியர்கள் வழிநடாத்தியிருந்தனர்.

இதற்கான எழுத்துருவாக்கத்தை விமலநாதன் மேற்கொண்டிருந்தார். இப் போட்டியில் யாழ்.இந்து சார்பாக ம.கஜகிருஷ்ணா, வை.நிவேதன், எஸ்.நதிஸ்கர், வி.கஜானன், தி.கௌரிஷங்கர், ப.சங்கீர்த்தன், எஸ்.நிஷாந்தன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.(48)

# புதிய நிர்வாகத்தெரிவு

(கரணவாய்)

புற்றளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக க.சண்முகநாதன், செயலாளராக ஆ.நிர்மலன், பொருளாளராக ஆ.பிறைசூடி, போஷகர்களாக ஆ.சிவநாதன் ஆகியோரும். 12 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(18)




சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு


# ரஷ்யாவில் கிண்ணம் வெல்வோம்

(ரியோடி ஜெனீரோ)

ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலக கிண்ணக் கால்பந்து போட்டியில் கிண்ணத்தை வெல்வோம் என பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் சமீபத்தில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட பிரேசில் அணி அரையிறுதியில் 1-7 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறியது.

கொலம்பியாவுக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் பிரேசில் அணி வீரர் நெய்மரை, கொலம்பியா வீரர் ஜுனிகா முழங்காலால் இடித்து தள்ளியதில் முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டு விலகினார். நெய்மரின் வெளியேற்றம் பிரேசில் அணிக்கு பெருத்த பின்னடைவை ஏற்படுத்தியது. அவர் விளையாடாத இரண்டு ஆட்டத்திலும் பிரேசில் தோல்வியையே தழுவியது.



காயத்துக்கு சிகிச்சை பெற்று வரும் 22 வயதான நெய்மர் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலக கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது எங்களது சிறு வயது கனவாகும். அதனை அடைய முடியாமல் போனது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. அதனால் தான் நாங்கள் கண்ணீர் விட நேர்ந்தது. நாங்கள் கிண்ணத்தை வெல்ல முயற்சி செய்தோம். ஆனால் அந்த முயற்சியில் சறுக்கல் ஏற்பட்டுவிட்டது. பிரேசில் அணியின் தோல்விக்கு சிறிய விடயங்களே காரணம். இருப்பினும் அதனை விபரிக்க முடியவில்லை.

பிரேசில் கால்பந்து பின்னடைவை சந்தித்து இருப்பதாக நான் கருதுகிறேன். ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளை விட பின்னுக்கு நாங்கள் சென்றுவிட்டோம். எங்கள் அணி சரிவு கண்டிருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். குறிப்பிட்டுச்சொல்லும் படியான தவறு எதனையும் பயிற்சியாளர் செய்யவில்லை. ஆட்ட தந்திரங்கள் குறித்து எனக்கு முழுமையாகத்தெரியாது. பயிற்சியாளர் லூயிஸ் பெலிப் ஸ்காலரி பிரேசிலின் சிறந்த பயிற்சியாளர்களில் ஒருவர் ஆவார். அணியின் பயிற்சி இன்னும் தீவிரமாக இருக்கவேண்டும். ஐரோப்பிய அணிகளை விட பிரேசிலின் பயிற்சி குறைவாக இருப்பதையே இது காட்டுகிறது. நாம் அதிகம் பயிற்சியில் ஈடுபட்டு இருக்கலாம். ஆனாலும் அர்ப்பணிப்புடன் கூடிய அதிக பயிற்சி அவசியமானதாகும்.

அடுத்த 4 வருடங்களில் (2018) ரஷ்யாவில் நடைபெறும் போட்டியில் உலக கிண்ண கால்பந்துப் போட்டியில் எங்களது உலக கிண்ணக் கனவை நனவாக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. தற்போது எனக்கு 22 வயது தான் ஆகிறது. திருமணத்தை குறித்து தற்போது நினைத்துப் பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# இங்கிலாந்தின் கால்பந்து கப்டன் ஓய்வு

(லிவர்பூல்)

இங்கிலாந்து கால்பந்து அணி கப்டன் ஸ்ரீபன் ஜெரார்ட், சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்தார்.

பிரேசிலில் நடைபெற்ற 20ஆவது உலக கிண்ணக் கால்பந்து தொடரில், டி பிரிவில் இடம் பிடித்த இங்கிலாந்து அணி, இரண்டு தோல்வி, ஒரு சமநிலை உட்பட ஒரு புள்ளியுடன் முதல் சுற்றோடு திரும்பியது. இத்தொடரில் இங்கிலாந்து அணியின் கப்டனாக ஸ்ரீபன் ஜெரார்ட் (வயது- 34) செயற்பட்டார்.

இந்நிலையில் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக ஜெரார்ட் நேற்று முன்தினம் அறிவித்தார். கடந்த 2000ஆம் ஆண்டு உக்ரைனுக்கு எதிரான போட்டியில் அறிமுகமான இவர், இங்கிலாந்து அணிக்காக 114 போட்டிகளில் விளையாடி, 21 கோல்கள் அடித்துள்ளார். இதன்மூலம் அதிக போட்டிகளில் விளையாடிய இங்கிலாந்து வீரர்கள் பட்டியலில் பீற்றர் ஷில்டன் (125 போட்டி), டேவிட் பெக்கம் (115) ஆகியோருக்குப் பின், மூன்றாவது இடம் பிடித்தார். இங்கிலாந்து அணிக்காக தலா 3 உலக கோப்பை, ஐரோப்பிய சம்பியன்ஷிப் தொடர்களில் பங்கேற்றுள்ளார்.

கடந்த 2012 இல் பிரேசிலில் நடந்த "யூரோ" தொடரில் இங்கிலாந்து அணியின் கப்டனாக பொறுப்பேற்றார்.

இதுகுறித்து ஸ்ரீபன் ஜெரார்ட் கூறுகையில், சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் முடிவு கடினமான ஒன்று. இங்கிலாந்துக்காக விளையாடியதை மிகப்பெரிய கௌரவமாக கருதுகிறேன். மீண்டும் இங்கிலாந்து அணியின் சீருடையை அணிய முடியாதது வருத்தம் அளிக்கிறது. தொடர்ந்து லிவர்பூல் கிளப் அணிக்காக உள்ளூர் போட்டிகளில் விளையாடுவேன் என்றார்.

# வாழ்த்து மழையில் இந்திய அணி

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிராக லோட்சில் இந்திய அணி பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு, கிரிக்கெட் உலகின் பிரபலங்கள் டுவிட்டரில் வாழ்த்துத் தெரிவித்தனர். இதன் விபரம்:

இந்திய அணி இங்கிலாந்தை எழ விடாமல் மோசமாகத் தோற்கடித்துவிட்டது. இத்தனைக்கும் இங்கிலாந்துதான் நாணயச் சுழற்சியில் வென்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இங்கிலாந்துக்கு மாற்றம் தேவைப்படுகிறது.

**ஷேன் வோர்ன் (ஆஸி. முன்னாள் வீரர்)**

இந்தியாவுக்கு வாழ்த்துகள். லோட்ஸில் வெற்றி பெறுவதற்கான அனைத்து தகுதியும் இந்தியாவுக்கு இருந்தது.

**அலெக்ஸ் ஸ்ருவெர்ட் (இங்கிலாந்து முன்னாள் வீரர்)**

இசாந்த் சர்மாவின் பந்து வீச்சு அபாரம். இங்கிலாந்து அணி மீது அனுதாபம் இல்லை. அவர்களுக்கு ஒரு தலைவன் (கப்டன்) தேவை, பயிற்சியாளர் அல்ல.

**பிஷன் சிங் பேடி (இந்திய முன்னாள் வீரர்)**

உணவு இடைவேளைக்குப் பின் இங்கிலாந்து வீழ்ந்திருக்கலாம். ஆனால், இந்திய அணி கடந்த ஐந்து நாட்களாக சிறப்பாகவே செயற்பட்டது. இந்திய வெற்றிக்கு தகுதியான அணி.

**சஞ்சய் மஞ்சரேக்கர் (இந்திய முன்னாள் வீரர்)**

இந்திய அணியின் மகத்தான டெஸ்ட் வெற்றி இது. இசாந்தின் பந்து வீச்சு அபாரம். இதன் மூலம் நான் மகிழ்ச்சிக்குள்ளாகியிருக்கின்றேன்.

**சகீர்கான் (இந்திய அணி வீரர்)**

அபாரமான வெற்றி. சிறந்த வெற்றியைப் பதிவு செய்த டோனி தலைமையிலான இந்திய அணிக்கு வாழ்த்துகள்.

**வீ.வி.எஸ்.லக்ஸ்மன் (இந்தியா முன்னாள் வீரர்)**

தன் மீதான விமர்சனத்துக்கு 7 விக்கெட்டுக்களை வீழ்த்தி விடை கொடுத்த இசாந்த் சர்மாவுக்கு வாழ்த்துகள்.

**டொம் மூடி (ஆஸி. முன்னாள் வீரர்)**

ஒரு மணி நேரத்தில் எல்லாம் மாறி விட்டது. சரியான தலைமைப் பண்பு இல்லை. துடுப்பாட்டம், பந்துவீச்சு மோசமாக உள்ளது. இங்கிலாந்து அணியை நினைத்தால் பயமாக உள்ளது. கட்டாயம் மாற்றம் தேவை.

**மைக்கல் வோன் (இங்கிலாந்து முன்னாள் கப்டன்)**



# எரங்க அவுட்

(கொழும்பு)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் எரங்க காயம் காரணமாக விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் களத்தடுப்பில் ஈடுபட்ட வேளையில் ஆட்காட்டி விரலுக்கும் பெருவிரலுக்கும் இடையில் காயம் ஏற்பட்டது. உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவருக்கு எட்டு தையல்கள் போடப்பட்டன. இதன் காரணமாகவே இரண்டாவது போட்டியில் எரங்க விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அணி சார்பாக 2014ஆம் ஆண்டு கூடுதலான விக்கெட்களைக் கைப்பற்றிய வீரர் எரங்க. இவர் விளையாட முடியாத நிலையில் தம்மிக்க பிரசாத் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# என்ன ஒற்றுமை பாருங்கோ

(லண்டன்)

கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணிக்கு முதன் முறையாக உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த பெருமை கபில்தேவையே சேரும். அதன்பின், 28 வருடங்கள் கழித்து டோனி தலைமையில் 2011ஆம் ஆண்டு இந்தியா உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதேபோல், கபில்தேவ் தலைமையிலான டெஸ்ட் அணி 1986ஆம் ஆண்டு லோட்ஸ் மைதானத்தில் முதல் வெற்றியை ருசித்தது. டோனி தலைமையிலான தற்போதைய டெஸ்ட் அணி 28 ஆண்டுகளுக்கு பின்பு லோட்ஸ் டெஸ்டை வென்றுள்ளது.

1983 இல் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய கபில்தேவ் அணி 3 வருடங்களுக்கு பின்னர் லோட்ஸில் வெற்றி பெற்றது. அதேபோல், 2011இல் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய டோனி அணி தற்போது 3 வருடங்களுக்கு பின்னர் லோட்ஸ் டெஸ்ட் போட்டியில் வென்றுள்ளது. டோனி தலைமையிலான அணி வெளிநாட்டு மண்ணில் 1124 நாட்களுக்குப் பின்னர் முதல் வெற்றியைப் பெற்றுள்ளது.

# களத்திற்கு வெளியில்...

இங்கிலாந்து அணிக்கெதிரான இந்த வெற்றி நினைவில் கொள்ளத்தக்க வெற்றியாகும். ஏனெனில் தற்போதைய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்களில் பெரும்பாலனவர்களுக்கு இதற்கு முன்பு இங்கிலாந்து மைதானத்தில் ஆடிய அனுபவம் கிடையாது. இங்கிலாந்து ஆடுகளத்துக்கு புதியவர்களான அவர்களது செயற்பாடும், அணுகுமுறையும் மிகவும் அற்புதமாக இருந்தது. 2011ஆம் ஆண்டு இங்கிலாந்து தொடரில் இருந்து நிறைய பாடங்கள் கற்றுக் கொண்டுள்ளோம். 3ஆவது நாள் வரை ஆட்டம் எமது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்தினோம். அதன் பின்னர் தான் சுழற்பந்து வீச்சு எடுபடும். கடந்த தொடரின் போது இதுபோல் செயற்பட முயற்சித்தோம். ஆனால் முடியாமல் போய்விட்டது. ரவீந்திர ஜடேஜா மிகச் சிறப்பாக செயற்பட்டார். அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர் போன்று நுணுக்கமாக ஆடினார். மதிய உணவு இடைவேளைக்கு பின்னர் இசாந்த் சர்மா ஷொட் பிட்ச் பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்பட்டார்.

**டோனி (இந்திய அணிக் கப்டன்)**

முதல் இனிங்ஸில் ரஹானேவின் துடுப்பாட்டம் நன்றாக இருந்தது. அது தான் எமது அணிக்கு உத்வேகம் அளிப்பதாக அமைந்தது: விஜய், ரவீந்திர ஜடேஜா, புவனேஷ்வர்குமார் ஆகியோரின் ஆட்டமும் சிறப்பாக இருந்தது. இந்த டெஸ்டில் நான் வீழ்த்திய விக்கெட்டுக்கள் எனக்குக் கிடைத்ததாக கருதவில்லை. இந்த விக்கெட்டுக்கள் எல்லாம் கப்டன் டோனிக்கு கிடைத்தவை என்று தான் சொல்வேன். நீ உயரமாக இருக்கிறாய், உன்னால் பவுன்சர் பந்துகளை வீச முடியும் என்று டோனி கூறி உற்சாகம் அளித்தார். அவர் சொன்னபடி நடந்ததால் விக்கெட்டுக்கள் வீழ்ந்தன. டோனி அமைதியாகவும், அடுத்தவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையிலும் செயற்படக் கூடியவர்.

**இசாந் சர்மா (இந்திய அணி வீரர்)**

லோட்ஸ் டெஸ்ட் போட்டி ஒரு கடினமான தோல்வி. இந்திய அணியின் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் அருமையாக இருந்தது. பந்து சுழல்வதுடன், எகிறும் தன்மை கொண்டதாக ஆடுகளம் இருந்ததால் தான் நாங்கள் பந்துவீச்சை தேர்வு செய்தோம். இருப்பினும் நான் நினைத்ததை சாதிக்க முடியவில்லை. இங்கிலாந்து அணியில் புதுமுக வீரர்கள் நன்றாக விளையாடினார்கள். நான் உட்பட அனுபவம் வாய்ந்த வீரர்கள் சரியாக ஆடவில்லை. தோல்விக்காக ஓய்வு பெறும் திட்டம் எதுவும் இல்லை.

**குக் (இங்கிலாந்து அணி கப்டன்)**

### உதயநகர் நியூஸ்ரார் ருவென்ரி-20

# கிண்ணம் வென்றது முல்லை. சென்.யூட்ஸ்





(கிளிநொச்சி)

வன்னி பிரதேச அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக்கிண்ணத்தை முல்லைத்தீவு சென். யூட்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி உதயநகர் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்கு கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் தருமபுரம் இளந்தாரகை அணியும் முல்லைத்தீவு சென். யூட்ஸ் அணியும் மோதின. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென். யூட்ஸ் அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

முன்னதாக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் சம்பிரதாயபூர்வமாக வீரர்களுக்கு கைலாகு கொடுத்து போட்டியினை ஆரம்பித்து வைத்ததோடு போட்டிக்கான நிதி உதவியினையும் வழங்கியிருந்தார்.

இப்போட்டி நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் தவநாதன், கரைச்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் குமார் மற்றும் பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் உள்ளிட்ட விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நடாத்தப்பட்ட மிகப் பெரிய சுற்றுப் போட்டியாக இது அமைந்திருப்பது எங்களுக்கு பெரு மகிழ்ச்சி. அத்துடன் போர் நடைபெற்ற காலப் பகுதிகளில் இது போன்ற பெரிய தொடர்கள் நடாத்தப்பட்ட நிலையில், இனி வரும் காலங்களில் இவ்வாறான போட்டித் தொடர்கள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டால் வன்னிப் பிரதேச வீரர்களின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள அரிய வாய்ப்பாக அமையும் என இறுதிப் போட்டியில் மோதிக் கொண்ட இரு அணிகளால் குறிப்பிடப்பட்டது. (29)

## வடமராட்சி செம்மீனின் விளையாட்டு விழா

(அச்சுவேலி)

வடமராட்சி செம்மீன் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படவுள்ள மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் மயிர்கூர் செறியும் வீர சாகசம், வாகனம் இழுத்தல், கடலில் படகு இழுத்தல், மோட்டார் படகு ஓட்டம், கட்டு மரம் வலித்தல், தம்பதிகளின் சைக்கிள் ஓட்டம், வினோத உடை, மரதன், தலையணைச் சண்டை, கிறிஸ் கம்பம் ஏறுதல், கயிறு இழுத்தல் போன்ற பல போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் 30 தொடக்கம் 40 வரையானோருக்கு ஒரு பிரிவாகவும், 40 தொடக்கம் 50 வரையானோருக்கு இன்னொரு பிரிவாகவும் அது நடாத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் வீர,வீராங்கனைகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், வெற்றியீட்டுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (85)

### தேசிய மட்ட கராத்தே, குத்துச் சண்டையில்

## முல்லை வீரர் வள்ளுவன் வெண்கலம்

(கொழும்பு)

40ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கராத்தே மற்றும் குத்துச் சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நாகேந்திரன் (வள்ளுவன்) இரு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சு, விளையாட்டுத் திணைக்களம் ஆகியன இணைந்து நடாத்திய 40ஆவது விளையாட்டு விழாவின் கராத்தே மற்றும் குத்துச் சண்டைப் போட்டிகள் அண்மையில் கொழும்பில் நடைபெற்றன.

இதில் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக பங்குகொண்ட நாகேந்திரன் கராத்தே மற்றும் குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்குபற்றினர். 84 கிலோ கிராம் நிறைப் பிரிவின் கராத்தேப் போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும், 81 - 91 இடைப்பட்ட கிலோ கிராம் நிறைப் பிரிவு குத்துச் சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருட தேசிய மட்ட குத்துச் சண்டைப் போட்டியில் மூன்று வெண்கலப் பதக்கங்களை முல்லைத்தீவு மாவட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டம் அண்மைக் காலங்களில் சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருவதுடன் விளையாட்டுத் துறையிலும் அபரிமிதமான வளர்ச்சிகளை கண்டு வருகின்றது. 2011 முதல் வடமாகாண விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிவரும் இம்மாவட்டம் மாகாண மட்டத்தில் படிப்படியாக முன்னேறி வருவதை அவதானிக்க முடிகின்றது.

வீரர்களின் இடைவிடாத பயிற்சியும் உறுதியான மனோதிடமும் தேசிய மட்டத்தில் பதக்கங்களை வென்றெடுப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. அத்துடன் மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன், மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ். தனுராஜ் ஆகியோரும் மாவட்ட வீரர்களை ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சரண்ராஜ் பொறுப்பான ஆட்டம்

## தெல்லிப்பளை மகாஜன அபார வெற்றி

(தெல்லிப்பளை)

சரண்ராஜின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் தெல்லிப்பளை மகாஜன கல்லூரி அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் தெல்லிப்பளை மகாஜன கல்லூரி மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜன கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எம். நிதுர்ஷன் 47, பபிஷன் 42, டிலக்ஷன் 20, ஜதுர்ஷன் 16 என ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜெசிந்தன் நான்கு, துலக்ஷன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜன கல்லூரி அணி 39 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரி. சரண்ராஜ் பொறுப்பாக ஆடி 66 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு துணை புரிந்தார். மற்றும் செந்தூரன் 35, பிரணவன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜீபன், பபிஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் தெல்லிப்பளை மகாஜன கல்லூரி அணி இரு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. (93)

## விரைவில் தேர்தல்


பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் தெரிவிற்கான தேர்தலை விரைவில் நடாத்துமாறு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவி மாறி மாறி பிரச்சினைகளுடன் ஒவ்வொருவரினது கைகளுக்கும் மாறிய வண்ணம் உள்ளது. இந்த நிலையில் நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் உடனடியாக தேர்தலை நடாத்தி ஒரு தலைவரை நியமிக்குமாறு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தற்போதைய தலைவர் நஜீம் சேதி 7 நாட்களுக்கு மட்டுமே தலைவராக இருக்க முடியும் எனவும் அதற்குள் இடைக்கால உப தலைவர் ஒருவரை நியமித்து அவரிடம் தேர்தலுக்கான பொறுப்புக்களை வழங்குமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.





யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அலகும், விளையாட்டு அவையும் இணைந்து நடாத்திய வர்ண இரவுகள் நிகழ்வில் 117 வீர வீராங்கனைகள் வர்ண விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கடந்த சனிக்கிழமை விளையாட்டு அவையின் தலைவர் சி. மயூரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் விருது வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம்.




# வலையில் கிடைத்தவை...

## வாடகை வீட்டை தட்டிப்பறித்த கூட்டமைப்பு எம்.பி.யின் சண்டித்தனம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி ஒருவர் யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றை வாடகைக்கு எடுத்திருந்தார். வீட்டு உரிமையாளர் மூன்று மாதங்களுக்கு மட்டுமே வாடகைக்கு தர முடியும் என்றும், அதன் பின் கனடாவில் இருந்து உறவினர்கள் வருவதால் வீட்டை திருப்பி தந்து விட வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

அதன் படி அந்த எம்.பி யூன் 30 ஆம் திகதியுடன் உரிமையாளருக்கு வீட்டை திரும்ப கையளித்திருக்க வேண்டும். ஆனால், யாழ்ப்பாண மண்வாசனையே தெரியாமல் கொழும்பில் ஆடம்பர மாளிகையில் இருந்த தனது மனைவி பிள்ளைகளை விழாவிற்காக யாழ் அழைத்து வந்து அந்த வாடகை வீட்டில் தங்க வைத்திருந்தாராம்.

எம்.பி.யின் மனைவி பிள்ளை குட்டிகள் விழா முடிந்தவுடன் யாழ் மண்ணுக்கு டாட்டா காட்டி விட்டு திரும்பவும் கொழும்பு மாளிகையில் குடியேறி விட்டனர். ஆனாலும் தங்கியிருந்த வாடகை வீட்டில் ஏதோ சாமான்கள் இருக்காம். அதனால் அறைகள் யாவும் பூட்டிய படியே உள்ளன.

யூன் முப்பதுக்கு வீட்டை விடுவதாக எம்.பி கொடுத்த வாக்குறுதியை நம்பி, வீட்டை திருப்பித்தருமாறு கேட்ட வீட்டு உரிமையாளர் இப்போது எம்.பி.யால் மிரட்டப்பட்டு வருகிறார்.

சொன்னபடி கனடாவில் இருந்து உறவினர்களும் வந்து சேர்ந்து விட்டனர். அவர்கள் தங்க இடமின்றி தவிக்கையில் பல அறைகளைக் கொண்ட அந்த வீட்டில் இரண்டு அறைகளை மட்டும் திறந்து விட்டிருக்கிறார் எம்.பி. வீட்டு உரிமையாளரும் உறவினர்களும் இரண்டு அறைகளிலும், விறாந்தையிலும் நெருக்குப்பட்டு படுத்துறங்க எம்.பி மிகுதி அறைகளை பலாத்காரமாக பூட்டி வைத்திருக்கிறாராம்.

இதைத் தட்டிக்கேட்ட வீட்டு உரிமையாளரை தனது பாதுகாப்பு உத்தியோகத்தரை அனுப்பி மிரட்டியிருக்கிறார் எம்.பி. அதுவும் போதாது என்று தான் கள்ளத்தனமாக உறவு வைத்திருக்கும் அரசின் பொலிசாரையும் அனுப்பி மிரட்டிப்பார்க்க முயன்றிருக்கிறார். அங்கு சென்ற பொலிஸார் வீட்டு உரிமையாளரினதும் உறவினர்களினதும் பரிதாப நிலையைக் கண்டு திரும்பி சென்று விட்டனர்.

வீட்டை தற்போதைக்கு திருப்பித் தர முடியாது என்று எச்சரித்து எம்.பி சண்டித்தனம் காட்டி வருகிறார். வீட்டு உரிமையாளர்கள் நடுத்தெருவில். அதை வாடகைக்கு எடுத்த எம்.பி.யின் கையில் வீட்டின் சாவிக்கொத்து.

இந்த அடாவடி எம்.பி.யும் இவரது ஆட்களும் தான் "எமது நிலம் எமக்கே சொந்தம்" என்று மக்களின் மீள் குடியேற்றத்திற்கு போராட்டம் நடத்துகிறார்களாம். உத்தமர்கள் வேடம் போடும் கூட்டமைப்பு பிரகிருதிகளின் சண்டித்தனமும், ஆதிக்க மிரட்டலும் இப்போது அம்பலமாகி வருகிறது.

## "நான் பூவும், பொட்டும், பதவியுமாக வாழ்வதைக் கெடுத்து விடாதீர்கள்"

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், தம்மை பதவியில் இருந்து இறக்க மீடியாக்கள் சதி செய்வதாக கூறியுள்ளார். இதற்கு காரணம், பல மீடியாக்கள், "முதல்வர் விக்கினேஸ்வரன் தமது பதவியை துச்சமென உதறித் தள்ளப் போகிறார்" என செய்தி வெளியிட்டதுதான்.

வடக்கு மாகாணத்தில் ஜி.ஏ. சந்திரசிறி, கவர்னராக 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்தபின் நியமிக்கப்பட்டிருந்தார். "இவரை நீக்க வேண்டும், இல்லாவிட்டால் நடப்பதே வேறு" என முதல்வர் விக்கினேஸ்வரன் சூளுரைத்திருந்தார்.

ஆனாலும், கவர்னரின் பதவிக்காலம் சில தினங்களுக்கு முன் மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. அதற்கு முதல்வர் விக்கி கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

இவரது நிலைப்பாட்டை பார்த்த ஒரு ஊடகம், "கவர்னருக்கு பதவி நீடிப்பு கொடுத்ததை எதிர்த்து, தன் மானச் சிங்கமான முதல்வர் பதவியை உதறித் தள்ளுவார்" என எழுதியது.

இதை அப்படியே ஏனைய ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டுவிட்டன. மேலும் கொடுமையாக, முதல்வர் விக்கிக்கே போன் செய்த பலர், முதல்வர் பதவியை உதறுவதன் மூலம், அவரது துணிச்சல், தன்மானம், பதவி மீது ஆசையின்மை ஆகிய நற்குணங்கள் வெளித்தெரிவதாக பாராட்டு மேல் பாராட்டாக தெரிவிக்கத் தொடங்கி விட்டனர்.

திகைத்துப்போன முதல்வர், "ஐயோ.. பதவியில் இருந்து இறங்கும் எண்ணம் எனக்கு இந்த ஜென்மத்திலேயே ஏற்படாது" என்று பதில் கூறுவதற்குள் பலர் போனை வைத்து விடுகின்றனர்.

இதையடுத்தே முதல்வர் விக்கி "நான் பூவும், பொட்டும், முதல்வர் பதவியுமாக வாழ்வதைக் கெடுத்து விடாதீர்கள்" என்று கூறியுள்ளார்.

## 'அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் சமனாக முன்னெடுக்கப்பட வேண்டும்' வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியாக தெளிவானதொரு நிலைப்பாட்டை இன்னும் எடுக்கவில்லை என ரெலோ உறுப்பினரும் வட மாகாணசபை அமைச்சருமான பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். குறிப்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யும் நடவடிக்கையும் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அது தேர்தல் காலங்களில் மட்டும் பேசப்படும் விடயமாக இருக்கின்றது என அவர் குறிப்பிட்டார்.

12-07-2014 அன்று ஜேர்மனியில் ரெலோ அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கறுப்பு யூலை நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய டெனீஸ்வரன், இன்று தமிழ் பிரதேசங்களில் அரசியல் தீர்வுக்கான முனைப்புகளும் அபிவிருத்தியும் சமனான நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் அங்கு பேசும் போது, நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்ட முத்திரையின் மையைப் பார்க்கும் போது எமது மக்கள் சிந்திய இரத்தம் நினைவிற்கு வரவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம் உரையாற்றுகையில், 83ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடாத்தப்பட்ட தாக்குதலையடுத்தே யூலைக்கலவரம் இடம்பெற்றது. அது நடைபெற்றிருக்காவிடில், முள்ளிவாய்க்கால் துயரமும் இடம்பெற்றிருக்காது என்றார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனா உரையாற்றுகையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஸ்டி அமைப்பிலான தீர்வையே தாங்கள் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

## 'த.தே.கூ 13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்கவில்லை'

– லண்டனில் பா.உ. சிறீதரன் –

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கவில்லை" என பா.உ. சிவஞானம் சிறிதரன் யூலை 6 கிழக்கு லண்டனில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்க வில்லை என பொது மேடையில் தெரிவித்து இருப்பது இதுவே முதற்தடவையாகும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்காத நிலையில் பா.உ. சிறிதரன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை 13ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்கவில்லை எனத் தெரிவித்திருப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பினுள் எழுகின்ற அரசியல் முரண்பாட்டின் வெளிப்பாடாக உள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்கவில்லை என்றால் எதற்காக கூட்டமைப்பு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டது என்ற கேள்விக்கு, சர்வதேச நாடுகளின் நிர்ப்பந்தம் காரணமாக மக்கள் ஆணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்காக மாகாண சபைத் தேர்தல்களிலும் அடுத்தடுத்து நடைபெற்ற தேர்தல்களிலும் நாங்கள் போட்டியிட்டு வெற்றிபெற்று அதை நிரூபித்தோம் என்றார் சிறிதரன் எம்.பி.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஆசனம் வழங்கப்படாமல் வெளியேற்றப்பட்ட கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய முன்னணியின் அரசியல் நிலைப்பாட்டுடனேயே பா.உ. சிறிதரனின் அரசியல் நிலைப்பாடு அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. சிறிதரன் எம்.பி. தன்னுடைய உரையின் எந்தவொரு இடத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிக்கவில்லை.

பா.உ. சிறிதரனின் தீவிரமான விடுதலைப் புலிகள் சார்பு நிலைப்பாடு பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் தனிப்பட்ட முறையில் சிலர் கேள்வி எழுப்பிய போது, அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்றும் அதனைப் பற்றி கவலைகொள்ளத் தேவையில்லை என்ற வகையிலும் அவர் பதிலளித்துள்ளார்.

# பாசமலர்கள் ஜோடியாக நடிக்கலாமா?

1961 இல் வெளிவந்த "எல்லாம் உனக்காக" எனும் தமிழ் சினிமாவைப் பற்றி உங்களில் பெரும்பாலானோர் அறிந்திருக்கிறீர்களா என தெரியவில்லை. இத்திரைப் படத்தைப் பற்றி திரைவிமர்சகர் ராண்டார் கை குறிப்பிடும் போது, கதையமைப்பும் நடிகர்களின் பங்களிப்பும் சிறப்பாக இருந்த போதிலும் வணிக ரீதியாக இத்திரைப்படம் தோல்வியடைந்ததற்கு "நடிகர்களின் தேர்வு" (casting) என்பதையே காரணமாக குறிப்பிடுகிறார்.

அதாவது சிவாஜியின் முந்தைய திரைப்படமான பாசமலரில் அவரும் சாவித்திரியும் அண்ணன் -தங்கையாக நடித்து அது பெரும் வெற்றியை சந்தித்தது. எனவே அதற்குப் பிந்தைய இத்திரைப்படத்தில் அவர்கள் ஜோடியாக நடித்ததை மக்கள் விரும்பாததின் காரணமாகவே படம் தோல்வியடைந்தது என்கிறார்.

திரைத்துறையில் தொடர்ந்து வெற்றி பெற்று வரும் ஆணை நாயகனாக தேர்வு செய்வதில் யாருக்கும் எந்தப் பிரச்சினையுமில்லை. ஏன், அதற்காக கடுமையான போட்டியே நடக்கும். ஏனெனில் அவன்தான் அத்திரைப்படத்தின் மையம். ஆனால் ஒரு நாயகியை தேர்வு செய்யும் போது அவர் முன்னதாக யார் யாருக்கெல்லாம் ஹீரோயினாக நடித்தார், அவைகளில் எவை வெற்றி பெற்றன? இந்த குறிப்பிட்ட நாயகனுடன் எத்தனை படங்களுக்கு பிறகு நடிக்கிறார்? மக்களுக்கு சலிப்பேற்படாமல் இருக்குமா? என்றெல்லாம் கதை விவாதங்களின் போது இயக்குநர்களும் கதாசிரியர்களும் யோசிக்கிறார்கள் என்பது ராண்டார் கை மற்றும் பிரபல வசனகர்த்தா ஆரூர்தாஸ் போன்றோர் எழுதி வரும் தொடர்களில் வெளிப்படும் குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது.

ஒரு திரைப்படம் வணிக ரீதியாக வெற்றி பெறும் ஒரே நோக்கத்திற்காக அதில் எத்தனை சமரசங்கள்? எனில் அத்திரைப்படம் எப்படி ஒழுங்குணர்வோடு சிறப்பாக வெளிவரும்?

பார்வையாளர்களாக ஒரு திரைப் படத்தை முறையாக அணுகுவதற்கான போதிய பயிற்சி நம்மிடம் இல்லை என்பதற்கான பல அடையாளங்களில் இதுவுமொன்று.

ஒரு திரைப்படத்தின் பாத்திரங்களை அந்தக் கதைச் சூழலில் பொருந்தியிருக்கும் நபர்களாக அணுகாமல் வெகுசன இதழ்கள் தங்களின் வணிகத்திற்கென உண்மையும் பொய்யுமாக அள்ளி இறைக்கும் பல வம்புகளின் மூலமும் அவர்களின் உண்மையான வாழ்க்கையின் தகவல்களையும் நிலைகளின் மூலமும் அவைகளை திரைப்படத்தில் பொருத்திப் பார்த்து அதை பாராட்டும் அல்லது விலகும் முதிரா மனநிலையே இதற்கு காரணமாகிறது.




ஒரு குறிப்பிட்ட திரைப்படத்தின் கதைக்கு குறிப்பிட்ட நடிகரும் நடிகையும் மிக மிக பொருத்தமாக அமைவார்கள் என அதன் இயக்குநர் யூகித்திருந்து ஆனால் அவர்கள் நிஜ வாழ்க்கையில் அண்ணன் - தங்கை என்று ஏதோவொரு உறவுமுறையில் இருக்கும் பட்சத்தில், தொடர்புள்ள நடிகர்களுக்கு சம்மதமிருந்தும், மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதன் காரணமாகவே இயக்குநர் அந்தத் தேர்வை நிராகரிப்பாராயின்...


ஒரு நல்ல திரைப்படம் உருவாவதை தடுப்பதற்கு நம்மிடமுள்ள இந்த அபத்தமான மனநிலையும் ஒரு காரணமாயிருக்கிறது என்பது எத்தனையொரு கொடுமை?

- சுரேஷ் கண்ணன் -

# நோயுற்றவர்களின் உரிமைப் போராட்டம்

6

Dr.சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்.
யாழ் போதனா வைத்தியசாலை.




**நோ**யுற்றவர்கள் எதிர்நோக்கும் அவமதிப்புகள், கவனிப்பு குறைபாடுகள், வசதிக்குறைவுகள், சமூகமட்டத்தில் பராமரிப்பு குறைபாடுகள், தனித்துவத்தையும் இரகசியத் தன்மையையும் பேணுவதில் எதிர்நோக்கும் சவால்கள், பொருளாதாரச்சுமை, தரமான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் இருக்கும் சிக்கல்கள் தனிப்பட்ட தகவல்கள் ஊடகங்களில் அம்பலப்படுத்தல் போன்ற பல விடயங்களுக்கு எதிரான பல முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த முயற்சிகள் மேலும் உத்வேகம் பெறவேண்டிய தேவை இருக்கின்றது.

சில சமயங்களில் சட்டவரையறைக்கு உட்பட்டு நோயாளர்களின் உரிமைகளை மீறவேண்டிய இக்கட்டான நிலைமைகளும் மருத்துவ குழுவிற்கு ஏற்படுகின்றது. உதாரணமாக நோயுற்ற ஒருவரின் மனநிலை சரியான தீர்மானம் எடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்று மருத்துவக் குழு கருதுமிடத்து அவரின் விருப்பத்திற்கு மாறாகவும் சில வைத்திய முறைகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

சிலவகையான தொற்றுநோய்கள் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் அந்நோய் பரம்பலை கட்டுப்படுத்துவதற்காக நோயுற்றவரின் அனுமதி பெறப்படாமலேயே சம்பந்தப்பட்ட சில அதிகாரிகளுக்கு இந்த தகவலை வழங்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பொதுச்சேவையில் இருக்கும் ஒருவருக்கு ஏற்பட்டிருக்கும் நோயினால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று மருத்துவக்குழு கருதினால் அவ்வாறான தகவல்களையும் அவரின் விருப்பத்திற்கு மாறாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

உதாரணமாக பஸ் சாரதி ஒருவருக்கு கட்டுப்பாடில்லாத வலிப்பு நோய் இருக்குமாக, இருந்தால் அவர் அந்தத் தொழிலுக்கு பொருத்தமான நபர் அல்ல என்று தீர்மானித்து அவரின் நோய் நிலை சம்பந்தமான தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டிய கடமை மருத்துவக்குழுவிற்கு இருக்கின்றது.

வைத்தியசாலைகளையும் பொது இடங்களையும் நோயுற்றவர் அசுத்தம் செய்யாமல் தடுப்பதற்காக அவர்கள்மீது சில கட்டுப்பாடுகளை சுகாதார நிர்வாகப் பிரிவினர் ஏற்படுத்துவது நோயுற்றவர்களுக்கு சில சிரமங்களை ஏற்படுத்தலாம்.

வைத்தியசாலை மற்றும் சுகாதார சட்டவிதிகள் நடைமுறைப்படுத்தும் பொழுது அதனால் நோயுற்றவர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் ஏற்படும் வசதியீனங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

நோயுற்றவர்களின் கவனிப்புமுறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. உயிருக்கும் உடலுக்கும் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் இடையேயான போராட்டமாகவே மருத்துவச்சிகிச்சை முறை அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு நோயுற்றவரும் குணப்பட்டுச் செல்லும் பொழுது அவரும் அவரது சுற்றமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் அவர்களுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும். ஒரு நோயாளிக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டுவிட்டால் அல்லது நோயுற்றவர் இறந்துவிட்டால் அவரது சுற்றத்துடன் சேர்ந்து மருத்துவக் குழுவின் உள்மனமும் துயரம்கொள்ளும்.

இவ்வாறான வேதனையான சம்பவங்கள் மருத்துவமனைகளில் தொடர்ந்தவண்ணம் இருக்கும். ஆனால் இதற்காக மருத்துவக்குழு தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டிருக்க சூழ்நிலை இடம் தரமாட்டாது. காரணம் இன்னும்பல நோயுற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்கவேண்டிய தேவை இருந்துகொண்டிருக்கும்.

எத்தனையோ மரணங்களையும் துயரங்களையும் வேதனைகளையும் பார்த்து அனுபவித்த காரணத்தினால் நோயாளர்கள் தமது அறிவுரைகளைக் கடைப்பிடிக்காத பொழுது அவர்களுக்கும் அதேகதி நேர்ந்துவிடுமோ என்ற பதைபதைப்பு மருத்துவ குழுவிற்கு இருக்கும். ஆனால் அதற்காக நோயுற்றவரைக் கண்டிப்பது நியாயம் ஆகாது.

மனமும் உடலும் களைப்புற்றதால் சிலசமயம் கட்டுப்பாட்டை மீறி நோயுற்றவர்களைக் கண்டிக்க நேர்ந்தால் அதற்காக மருத்துவக்குழு மனம்வருந்தும்.

இவ்வாறான மனஉணர்வுகளையெல்லாம் எந்தச் சட்டக்கோவைக்குள் உள்வாங்குவது, யாரை நொந்துகொள்வது?

மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத் துறையிலும் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டக் கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வு களும் கூட்டு முயற்சியுமே முக்கியமாக அமைகின்றன.

(நன்றி: Jaffna Diabetic Centre)

---

# இந்த வேட்டி விவகாரம்

அ.மார்க்ஸ்

**செ**ன்னை கிரிக்கெட் கிளப்பில் நடந்த நிகழ்ச்சிக்கு நீதிபதி அரி பரந்தாமனும் இரு மூத்த வழக்குரைஞர்களும் வேட்டி அணிந்து சென்றதற்காக அனுமதி மறுக்கப்பட்ட செய்தி சட்டமன்றம் வரைக்கும் வந்துள்ளது.

இந்தப் பிரச்சினையை சரியாக விளங்கிக் கொள்ள நாம் இரண்டு உண்மைகளைக் கணக்கில் கொள்ளவேண்டும்

1. இத்தகைய கிளப்புகள் மேல்தட்டு வர்க்கங்களுக்கானவை. ஓய்வு பெற்ற மற்றும் பதவியில் உள்ள அதிகார வர்க்கம், இராணுவ உயர் அதிகாரிகள், கார்ப்பொரேட் வர்க்கம், பெரும் பணக்காரர்கள் தான் இவற்றில் உறுப்பினர்கள். இந்த கிளப்புகளில் வேட்டிக்கு மட்டுமல்ல பைஜாமா, குர்தா, கொலர் இல்லாத ரீசேர்ட்கள், செருப்பு ஆகியவற்றுக்கும் அனுமதி இல்லை.

2. இது சென்னை கிளப்பில் மட்டுமல்ல மேல் தட்டு வர்க்க கிளப்புகள் எல்லாவற்றிலும் உள்ள நடைமுறைதான்.

இது அடிப்படையில் ஒரு மேல் தட்டு வர்க்க மனோபாவம். காலனீய எச்ச சொச்சம். மேல் தட்டினர் தம்மை அடித்தட்டு மக்களின் அடையாளங்களிலிருந்து பிரித்துக் காட்டிக் கொள்ளும் ஒரு திமிர் நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இது போன்ற ஆடை விதிகளும் பண்பாட்டுத் தடைகளும் பல மட்டங்களில் சமூகத்தில் செயற்படுவதைக் காணலாம். சென்ற ஆண்டில் ஆதார அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுத்துக் கொள்ள வந்த துப்பட்டா அணியும் வழக்கமில்லாத பெண்கள் வெளியே அனுப்பப்பட்டார்கள். படத்தில் முகம் தெளிவாக இருக்க வேண்டும் என்பது தவிர ஆதார அட்டை ஆணைய விதி முறைகள் வேறெதையும் சொல்லாத





போதும் இப்படி நடந்தது.

அரசு பள்ளிக்கூடங்களில் பெண் ஆசிரியைகள் அவர்களுக்குச் சவுகரியமான உடையான சுடிதார் அணிய அனுமதிக்கப்படுவதில்லை. உயர் நீதிமன்ற வழக்குரைஞர் மனோகரனின், மனைவியும் ஆசிரியையுமான தோழர் செல்வி இதை எதிர்த்தபோது அவர்மீது நிர்வாக நடவடிக்கை எடுக்கும் நிலை ஏற்பட்டது, தான் நீண்ட தூரம் இரு சக்கர வாகனத்தில் வருவதாகவும், அதற்குச் சுடிதாரே சவுகரியமான ஆடையாக உள்ளது என அவர் சொன்ன காரணம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கிராமங்களில் இன்னும் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் செருப்பு அணியக் கூடாது, இரு சக்கர வாகனங்களில் செல்லக்கூடாது. வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு செல்லக் கூடாது என்றெல்லாம் எழுதப்படாத விதிகள் செயற்பட்டுக் கொண்டுதான் உள்ளன.

சென்னை கிளப்பில் நீதிபதி ஒருவர் வேட்டி அணிந்து நுழைய் அனுமதி மறுக்கப்பட்டதற்காக தமிழ்ப் பண்பாடு அவமதிக்கப்பட்டதாக கொதிக்கிற பலரும் அதே அளவிற்கு இந்தப் பிரச்சினைகளைக் கண்டு கொண்டதில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆடை என்பது நமது சவுகரியத்திற்காக உள்ளது. பண்பாடு என்பதற்கு ஒரு தொடர்ச்சியும் உண்டு அதேபோல அதில் கலப்பிற்கும் இடம் உண்டு. பான்ட், சேர்ட், சுடிதார் என்பதெல்லாம் இப்போது ஏதேனும் ஒரு நாடு அல்லது இனத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்கக்கூடிய உடைகள் அல்ல. இன்றைய கலகட்டத்திற்குரிய உடைகளாக அவை தமிழர்கள் உள்ளிட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டன.

வேட்டியாக இருக்கட்டும், சுடிதாராக இருக்கட்டும் இவற்றை கண்ணியமற்ற உடைகள் என்பதாகக் காண்கிற நிலை வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

வக்கீல்கள் கறுப்புக் கோட், அதற்கு மேல் நீண்ட கறுப்பு அங்கி ஆகியவற்றைக் கட்டாயம் அணிந்துதான் நீதிமன்றங்களுக்கு வரவேண்டும் என்பது போன்ற ஆடை விதிமுறைகளும் கூட ஒழிக்கப்பட வேண்டியவைதான். ஒரு “வெஸ்ட்”, வெள்ளைச் சட்டை, அப்புறம் ஒரு கறுப்பு கோட், பிறகு ஒரு கறுப்பு அங்கி இதெல்லாம் எதற்கு? நமது நாட்டு தட்ப வெப்ப நிலைக்கு இது தேவையா? இது காலனீய எச்ச சொச்சம் இல்லையா? இங்கிலாந்திலேயே 2008ல் இது தொடர்பான சீர்திருத்தங்கள் வந்து விட்டன. ஆட்டுக்குத் தாடி போல வழக்குரைஞர்களுக்குக் கறுப்புக் கோட் என்கிற “எக்ஸ்ட்ரா” தொங்கல் ஏன்?

காலம் மாறுகிறது இதை எல்லோரும் உணர வேண்டும். சமூகத்தில் நிலவும் எல்லாவிதமான ஆடை விதிகளும் ஒழிக்கப்பட வேண்டும். அவரவர்களுக்கு விருப்பப்பட்டதை அவரவர்கள் அணிந்து வரட்டும். பண்பாடுகளை அளக்கப் பொது அளவுகோல்கள் கிடையாது.

அதேபோல ஏதோ ஒரு உடையை அல்லது உணவை ஒரு பண்பாட்டின் அடையாளமாகச் சொல்வதும் அபத்தம். வேட்டி, புடவை, ரவிக்கை மட்டுமா தமிழ்ப் பண்பாடு? லுங்கி அணிபவர்கள் உள்ளனர், பான்ட், சுடிதாரே இன்று பெருவழக்காகி வருகிறது. வீட்டில் சவுகரியமான ஆடையாக ஆண்கள் சாறம் அணியும் வழமை உள்ளது. இன்று அதுவும் மாறி அரைக்கால் சட்டை அதிகம் புழங்கப்படுகிறது. அவ்வளவு ஏன் கோவணம் கூடத் தமிழர் உடைதான்.

# நிர்வாகத் தெரிவின்றி செயலிழந்திருக்கும் கமநலசேவை விவசாய சம்மேளனங்கள்

## கவலை தெரிவிக்கின்றனர் மக்கள்

(கொடிகாமம்)

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்திற்கு உட்பட்ட வரணி பகுதிகளில் பல வருடங்களாக விவசாய சம்மேளனங்கள் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படாமல் செயலிழந்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். சில பிரிவுகளில் உள்ள சம்மேளனங்கள் கடந்த 06 வருடங்களுக்கு மேலாக புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்படாமல் தலைவர் மட்டுமே இயக்கிக் கொண்டிருப்பதாகவும் இதனால் நிதிமோசடிகள் இடம் பெற வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை எடுத்துக் கூறியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கின்றனர். கடந்த வருடமும் நிர்வாகம் செயலிழந்து போனதால் காலபோக செய்கைக்கான விதை நெல், நெற்செய்கை அழிவு மானியம் முதலானவை கிடைக்கவில்லையெனவும் மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள், துறைசார் மாகாண அமைச்சர்கள் விவசாயிகளது பிரச்சினைகளையும் தீர்ப்பார்களா? திரும்பிப்பார்ப்பார்களா? என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். (14)

## பயனாளிகளுக்கு கருவிகள்

(கரணவாய்)

வடக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களம் பயனாளிகளுக்கு இலவச மூக்குக்கண்ணாடி, காது கேட்டும் கருவி என்பனவற்றை வழங்கியுள்ளது.

பயனாளிகளை கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் சிவசிறி கேட்டுள்ளார்.

**மூக்குக்கண்ணாடி,**
தி.இராசம்மா (சமரபாகு), க.ஜெயராணி (கம்பர்மலை).
**காதுகேட்கும் கருவி,**
ஜி.சீவரட்ணம் (உடுப்பிட்டி). (18)

## கைப்பைகள் திருட்டு பேருந்துகளில் அதிகம்

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் திருடர்கள் கைவரிசை தொடர்வதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

காலை வேளைகளில் பாடசாலைகள், அலுவலகங்களுக்குச் பயணிகள் அதிகமாகச் செல்கின்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்தி பயணிகளின் கைப்பைகளில் திருட்டு முயற்சியில் திருடர்கள் ஈடுபடுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே சாரதிகள் அதிகமாக பயணிகளை ஏற்றும்போது அவதானமாக ஏற்றுவதுடன் பயணிகளும் தமது உடமைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (14)

## பற்சிகிச்சை

(வரணி)

வரணிப்பிரதேச மக்களின் நன்மைகருதி வரணிப்பிரதேச வைத்தியசாலைகளில் வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பற்சிகிச்சை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்று வரும் இப்பற்சிகிச்சையின் போது பல் தொடர்பான பல்வேறு நோய்களுக்கு நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியுமென வைத்திய சாலை ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (150)

## ஊழியர் சேமலாபநிதி வர்த்தகர்களுக்கு விளக்கமளிப்பு

நெல்லியடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு தொழில் திணைக்களத்தினால் ஊழியர் சேமலாப நிதி பற்றிய கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கு அண்மையில் நாவலர் மடத்தடியிலுள்ள பால்சாலையில் நடைபெற்றதுடன். இதில் தொழில் ஆணையாளர் வருகைதந்து தொழிலாளர்களுக்கு இவ்விடயம் பற்றி தெளிவான விளக்கத்தை வழங்கினர். இதன் போது ஆணையாளர் அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டுமல்லாது தனியார் துறையினரும் இதன் மூலம் பல நன்மைகளைப் பெறமுடியும். எனவும் இதனூடாக பிள்ளைகளின் எதிர்காலம் வாழ்வாதாரம் என்பவற்றை மேம்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

## மின்விளக்குகள் பொருத்துமாறு புங்கன்குளம் மக்கள் கோரிக்கை

புங்கன்குளம் பிரதேசத்தில் உள்ள குறுக்கு வீதிகளின் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


புங்கன்குளம் கந்தர் மணியம் வீதியில் உள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த விளக்குகள் பழுதடைந்துள்ளதாகவும் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மின்விளக்குகள் பொருத்தப்படாது உள்ளதால் இருள் சூழ்ந்த பிரதேசமாக அப்பகுதிகள் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி மின்விளக்குகள் இல்லாததால் திருடர்கள் தமது கைவரிசையை காட்ட முறபட்டு வருவதாகவும் அதனை ஊர்மக்கள் ஒன்றிணைந்து முறியடித்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பலமுறை மின்சாரசபைக்கு அறிவித்திருந்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவித்த அவர்கள் மக்களின் நன்மைகருதியும் பாதுகாப்புக் கருதியும் இந்த வீதிகளுக்கு மின்விளக்குகளைப் பொருத்தித்தருமாறு மின்சார சபை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எஸ்)

## ரமழான் நற்சிந்தனை

நீங்கள் உங்களுக்கிடையில் தர்க்கம் செய்ய வேண்டாம். அதனால நீங்கள் பலவீனம் அடைவதுடன் ஆற்றலும் குன்றிப் போய்விடுவீர்கள். (திர்குர்ஆன்) (105)



## முரசின் இன்றைய பலன்

(23.07.2014 புதன்கிழமை)



ஜய வருஷம் ஆடிமாதம் 07 ஆம் திகதி.
துவாதசி / சித்தம்.
ரோகினி நட்சத்திரம் மு.ப. 10.45 வரை. பின்மிருகசீரிடம்.
இராகு காலம 12.02 - 01.32 வரை. சுபநேரம 04.32 - 06.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உரியநேரத்தில் மனையை அடைந்ததினால் திருடரின் முயற்சி அற்றுப்போதல். ஞாபக மறதியினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் சில வற்றை இழந்து போதல். |
| ரிஷபம் | பங்கினைக் கேட்டு முரண்பட்ட சகோதரனுடன் வாக்கு வாத மேற்படல். பிரச்சினையைச் சுமூகமாக தீர்த்து வைக்க பவ்வியமான முறையை கையாளுதல். |
| மிதுனம் | குழந்தைப்பாக்கியம் உண்டான அறிகுறி அறிந்ததால் மனம் ஆனந்தமடைதல். ஆலையில் அரைக்கக் கையளித்த பொருள் கையாடல் நடந்ததைக் கண்டு முரண்படல். |
| கடகம் | பாலியல் துன்புறுத்தல் நிலை ஏற்பட முயன்ற வேளை சத்தமிட்டதால் தப்பிவிடல். பொருட்களைக் கொள்வனவு செய்ய எதிர்பார்த்த பிரயாணம் மேற்கொள்ளல். |
| சிம்மம் | சட்டவிரோத மின்பாவனை கண்டுபிடிக்கப்பட்டதால் தண்டம் பெறல். முக்வரின் திருவிளையாடலால் இடைத் தங்கல் நாட்டில் சேர்த்து விடல். |
| கன்னி | வியாழசுகம் இருப்பதினால் திருமணம் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்தல். உண்மை நிலையை உணராமல் நடந்து கொண்டதால் ரகளை. |
| துலாம் | பொருட்கள் கொள்வனவு செய்ய வந்தவரின் பணநோட்டில சந்தேகம் ஏற்பட்டதால் மோசடியினின்றும் தப்புதல். பெற்றோருககும் பிள்ளைகளுக்கும் இடையில் களேபரம் ஏற்படல். |
| விருச்சிகம் | நியமனம் செல்லுபடியற்றதென வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மனிதஉரிமை ஆணைக்குழுவிடம முறையிட முஸ்தீபு. இழுபறி நிலையில் இருந்த காரியம் வெற்றி நிலைக்கு வருதல். |
| தனுசு | மூலநட்சத்திரம் பெண்ணை மணம்புரியத்தயங்கியவரை சோதிடர் அறிவுரை கூறி இணங்க வைத்தல். பெற்ற கடனை வசூலிக்க தனித்துச் செல்லாமல் துணையுடன் சென்றதால் துயர்விலகிவிடல். |
| மகரம் | மின்சார ஒழுக்கு ஏற்படும் அபாயநிலை கவனமெடுத்ததால் நீங்கிவிடல். நம்பிநடந்தவர்கள் உற்ற நேரத்தில் கைவிட்டதால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வினை ஒத்தி வைத்தல். |
| கும்பம் | மாமன்மாருடன் சில நாட்களாக பணம் சம்பந்தமாக நிலவிய பிரச்சினை தீர்ந்துவிடல். சமயோசித புத்தியினால் நேரவிருந்த விபத்து மயிரிழையில் விலகிப்போதல். |
| மீனம் | காசோலை மோசடிகள் தலைவிரித்தாடுவதினால் எச்சரிக்கையாக இருதல். நோயின் உபாதை காரணமாக இளைப்பாற்றும் எண்ணப்பங்கு மேலிடல். |



பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் பூநகரி நல்லூர் மேளாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது பாரம்பரிய முறைப்படி ஆடிக்கூழுக்கான மா இடிக்கும் நிகழ்வையும் ஆடிக்கூழ் பரிமாறப்படுவதையும் காணலாம். (112)

# பின்தங்கிய கிராமப்புறமக்களின் அபிவிருத்தியில் அக்கறை வேண்டும்

**– யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு –**



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியிலும் அதிகளவு மாற்றத்தைக் கொண்டு வர முடிந்தது என்ற நிலை வந்த போதிலும் சாதாரண கிராமப் புறமக்கள் பலர் இன்றுவரையும அபிவிருத்திகளில் ஓரங் கட்டப்பட்டு வருவதாக மக்கள் குறை கூறுவதை உங்களது வாழ்வியலுக்கும் நிலைமைகளை பார்க்கும் போது ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என அமைச்சரின் ஒருங்கிணைப்பாளரும், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

வரணி மாசேரி கிராமமக்களது வாழ்வாதார விடயங்கள் தொடர்பாக அப்பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரினால் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஒருங்கிணைப்பாளர் தொடர்ந்து கூறுகையில்,

நாம் அனைத்து பகுதி மக்களுக்கும் தரம் பாராது வர்க்க பேதம் அற்ற வகையில் தான் உதவிகளைச் செய்து வருகின்றோம். விட்டுக் கொடுப்புடனும் யதார்த்த பூர்வமான வழிகளை தெரிவு செய்வதன் மூலமுமே நாம தீர்க்க முடியாத விடயங்களையும் தீர்த்துக் கொள்ள முடியும்.

மக்களை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டு தான் இருக்கின்றனர். தமிழர்களது அரசியல் தலைமைகளை சரியானவர்கள் கையில் கொடுக்காமையால் தான் தமிழ்ச் சமூகம் அலைந்து திரிய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது..

தேர்தல் காலங்களில் தேசியவாதிகள் தாங்கள் சொல்வதைக் கேட்டு மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நிலைமையை மாற்றியமைக்க நீங்கள் உங்கள் சிந்தனைகளை மாற்ற வேண்டும என்பதைத் தான் நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

தேசியம் என்பது தமிழர் ஒவ்வொருவரினதும் இரத்தத்தில் உறைந்த விடயம் ஆனால் அதை வைத்து பிழைப்பு நடத்துவதனால் தான் இத்தனை இழப்பகளை சந்திக்க வேண்டி வந்தது கிடைக்கும் வாய்ப்புக்களை சரியாக பயன்பாடுத்தாமையால தான தமிழர்கள் பொன்னான சந்தர்ப்பங்கள் பலவற்றைத் தவற விட்டுக கொண்டிருக்கின்றார்கள என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ், நகரசபை உறுப்பினர் திருக்குமரன், மெடிஸ்கோ, சமுர்த்தி உத்தியோகத்தர் ரஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இருபக்கமும் வாகனம் நிறுத்துவதால் அசௌகரியங்களுக்குள்ளாகும் பயணிகள்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் சந்தை - காளிகோயில் வீதியை காலை வேளைகளில் பொதுமக்களால் பயன்படுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

சந்தைக்கு பொருட்களை கொள்வனவு செய்ய வருவோர் வாகனங்களை வீதியின் இரண்டு பக்கங்களிலும் நிறுத்தி விடுவதாகவும் இதனால் சந்தைக்கு அருகில் குடியிருப்போர் மற்றும் அவ் வீதியினைப் பயன்படுத்தும் பயணிகள், பாடசாலை மாணவர்கள் அவ்வீதியின் ஊடாக பயணிக்க முடியாது. கொடிகாமம் சந்தியூடாகவே செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை எடுத்து கூறியுள்ள போதிலும் இதுவரையில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (14)

# வலிகாமம் வலயமட்ட வணிகப்போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்விவலய கோட்டமட்ட வணிகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:-

பேச்சுப்போட்டி

உடுவில் பிரிவு - I

வ.வர்சனா (யா/இராமநாதன் கல்லூரி), ம.லிவேஜினி,கி.ஸோபனா (யா/தாவடி இந்து த.க. பாடசாலை)

பிரிவு - II

சி.தாகீசன் (யா/கந்தரோடை தமிழ் கந்.வித்), க.உமைப்பிரியா (யா/தாவடி இந்து த.க.பாடசாலை) கா.கமி(யா/இராமநாதன் கல்லூரி)

பிரிவு - III

ப.லுக்சிகா, இ.மேரிறொசானா, வ.வர்த்திகா (யா/இராமநாதன் கல்லூரி)

தெல்லிப்பழை


பிரிவு - I

சு.நிலக்சனா, சி.சஜித்தா, கி.வினோஜன் (யா/மகாஜனா கல்லூரி)

பிரிவு - II

சி.மதுசனா, யோ.அனுஸா, (யா/மகாஜனா கல்லூரி) சி.நிரோஜினி (யா/அருணோதய கல்லூரி)

(தொடரும்)



யாழ். கொழும்புத்துறை சென். ஜோசப் வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெல்சிப் திட்டத்தின் கீழ் பலவீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய சென்ஜோசப் வீதியும் கிரவல் இடப்பட்டு புனரமைக்கப்படுவதைக் காணலாம் (இ)

# ஆயுர் வேதம்



## உண்டவுடன் ... சிறிது ஓய்வு !

உணவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னும், ஏற்றுக்கொள்ளும்போதும், பின்னரும் மன ஓய்வும், உடல் ஓய்வும் அவசியம். இந்தச் சமயங்களில் ஏற்படும் உடல், மனப் பரபரப்பு நோயில் கொண்டு விடும்.

பசியை உணர்ந்து அதற்கான முக்கியத்துவம் அளிக்கும் வகையில் உடல், மனஅமைதிக்கு இடம் கொடுக்கும்போது, மற்ற இடத்திலுள்ள இரத்த ஓட்டம் சற்று குறைந்து இரைப்பையைச் சுற்றி இரத்த ஓட்டமும் மற்ற இயக்கங்களும் அதிகமாவதற்கு இடமேற்படுகிறது. இதன் மூலம் சமிபாடு நல்லமுறையில் ஏற்படுகிறது.

உணவிற்குப் பின் உடல், மனஅமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் வேலைகளில் ஈடுபடும்போது மற்ற உழைக்கும் பகுதிகளுக்கும் இரத்தத்தை அனுப்ப மூளை மறுக்கிறது. அதனால் களைப்பு ஏற்படுகிறது.

நிர்ப்பந்தத்தால் மூளை மற்ற இடங்களுக்கு இரத்தத்தை அனுப்பினால் சமிபாட்டிற்குத் தேவையான இரத்த ஓட்டமும், அதனால் ஏற்படும் கதகதப்பும் குறைந்து சமிபாடு தாமதமாக நிறைவேறுகிறது.

சமிபாடு ஆரம்பிக்கும் முதல் நிலையில் கபமும், இரண்டாம் நிலையில் பித்தமும் அதிகமாக வேண்டும். பல ருசிகளுடன் பல நிலைகளில் உள்ள உணவு உள்ளே செல்கிறது. அதைக் கூழாகக் கரைத்து ஒரே சீராகச் செய்யும் பணியே இரைப்பையில் நடக்கிறது.

கூழாகச் செய்வதில் கபம் உதவுகிறது. உண்ட பின் சிறிது ஓய்வெடுப்பதால் கபம் தன் பணியை ஆற்ற முடிகிறது. உடன் உடலுழைப்பிற்கு இடம் கொடுத்தால் கபம் சுரப்பது குறைவதோடு மட்டுமின்றி, உடனே பித்தமும் அதிகமாகச் சுரக்கிறது. அதனால் உணவு குழைவு படாமல் விதை விதையாக நிற்பது போன்ற உணர்ச்சி, கப பூச்சு இல்லாமல் சூடான பித்தம் ஏற்படுவதால் இரைப்பையில் காந்தல், புளித்த எதுக்களிப்பு போன்ற சமிபாட்டுத் தொந்தரவுகள் ஏற்படுகின்றன.

இந்நிலை நீடித்தால் புளிப்பு நிலைத்து புண் வரை ஏற்பட ஏதுவாகிறது. ஆகவே உண்டதும் ஓய்வு எடுத்து உணவை செரிப்பதற்கான கால அவகாசத்தை ஏற்படுத்தித் தர வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

இந்த ஓய்வை நீங்கள் நல்ல தூக்கத்திற்கு பயன்படுத்திவிடக் கூடாது. இதுவும் சமிபாடு தாமதமாகக் காரணமாகும். உடல் கனம், அசதி, சோம்பல் இவற்றை உண்டாக்கும். 15 – 20 நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொள்வதுதான் உசிதமே தவிர நீண்டநேர ஓய்வும் நல்லதல்ல.

இரவிலும் உண்டவுடன் சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு 1 – 2 மணிநேரம் சென்ற பிறகே தூங்குவதுதான் அதிகம் நல்லது. இரவில் நேரம் கழித்து உண்பதும், உண்டவுடன் தூங்குவதும் காலப்போக்கில் ஜீரண உறுப்புகளின் அசதிக்கும், அஜீரணத்திற்கும் காரணமாகலாம்.

இஞ்சி, சுவையில் காரம் மிக்கது. சமிபாடாகும்பொழுது இரைப்பையில் இனிப்பாக மாறும். சூடு, வறட்சி தரும். உமிழ்நீரைப் பெருக்கி, சுவையைத் தூண்டும். இரைப்பையைத் தூண்டிப் பசியைப் பெருக்கும். எந்த கடின உணவையும் செரிக்கச் செய்யும்.

இஞ்சியைத் துண்டுகளாக்கி எலுமிச்சம் பழச்சாறுடன், இந்துப்புச் சேர்த்துச் சாப்பிட்டால் அஜீரணம், அல்சர் போன்ற உபாதைகள் நீங்கிவிடும்.

வேறொரு சிறு கை வைத்தியமுறையும் இருக்கிறது. துண்டாக நறுக்கிய இஞ்சி 500 கிராம். சீரகம் 250 கிராம். கொத்தமல்லி விதை 250 கிராம். இந்துப்பு 125 கிராம். இவற்றுடன் எலுமிச்சம் பழச்சாறு அரை லீற்றர் ஊற்றி ஊற வைத்து வெயிலில் வைத்து உலர்த்தித் தூளாக்கிக் கொள்ளவும். பீங்கான் அல்லது மாக்கல் சட்டியில் ஊற வைப்பது நல்லது. 1 – 2 ஸ்பூன் அளவு வாயில் உமிழ்நீருடன் கரைத்துச் சாப்பிட ருசியின்மை, உமிழ்நீர் சுரப்பு, அஜீரணம், வாய்க் கசப்பு நீங்கும். தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சாப்பிட்டவுடன் மலக்கழிவிற்கு ஓடுவதும் நிற்கும்.

100 கிராம் ஓமத்துடன் இந்துப்பு 10 கிராம் சேர்த்து தூளாக்கி பீங்கான் பாத்திரத்திலிட்டு ஆடாதொடை இலைச்சாறு, இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, புதினாச்சாறு இவற்றில் வரிசையாக ஒவ்வொன்றாக 50 மில்லி லீற்றர் சேர்த்து ஊற வைத்து உலர வைக்கவும். நன்கு உலர்ந்ததும் அதை அரை கிராம் அளவு சாப்பிட்டு வர அஜீரணம் நீங்கும், அல்சர் உபாதை குறையும்.

ஆயுர்வேத மருந்துகளாகிய குடுச்யாதி கஷாயம், அவிபத்தி சூரணம், அஷ்டசூரணம், தாடிமாதி க்ருதம், வில்வாதி லேஹ்யம், ஜீரகவில்வாதி லேஹ்யம் போன்றவற்றை மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொண்டு வர அஜீரணம் மற்றும் அல்சர் உபாதைகளுக்கு விரைவில் தீர்வு காணலாம்.

# வடக்கு அபிவிருத்தியில் அக்கறை

## புதுமுறிப்பில் நன்னீர் மீன் வளர்ப்பு



கிளிநொச்சி புதுமுறிப்பு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமைவிஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்ந்தார்.

புதுமுறிப்புப் பகுதியில் சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்தின் ஊடாக 30 பாத்திகளில் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அதற்கான திட்ட அறிக்கையை தமக்கு சமர்ப்பிக்குமாறு துறைசார்ந்தோரிடம் கேட்டுக் கொண்டார். இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் கிளிநொச்சியில் வாழும் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு பேருதவியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், சேவாலங்கா பிரதித் தலைவரும், பேராசிரியருமான நவரட்னராஜா, பணிப்பாளர் கிருசாந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கால்நடை பண்ணை அபிவிருத்தி



முல்லைத்தீவு அனிஞ்செயன் குளம் பகுதியில் கைவிடப்பட்டுள்ள கால்நடை பண்ணைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் விஜயம் மேற் கொண்டு நிலைமைகள் தொடர்பில் அவதானம் செலுத்தினார்.

அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தின் அனிஞ் செயன் குளம் பகுதிக்கு கடந்த ஞாயிறுக் கிழமை விஜயம் மேற்கொண்டார். இதன்போது சேவாலங்கா நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட நல்லின கால் நடை உற்பத்தி பண்ணைக்கு விஜயம் மேற்கொண்டு அது தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார். அங்கு ஐந்து கட்டடத் தொகுதியில் ஒரே தடவையில் 150 பசு மாடுகளை வளர்க்க முடியும். ஆனாலும், அங்குள்ள பௌதீக வளப்பற்றாக்குறை காரணமாக பண்ணையைத் தொடர்ந்தும் இயக்குவதில் பல்வேறு நெருக்கடிகள் எதிர்கொள்ளப்பட்டுள்ளன.

30 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இப் பண்ணையில் கால்நடைகளுக்கான புல் வளர்ப்புத் திட்டத்துக்கென காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அங்கு பயிற்சி நிலையம் மற்றும் பால் உற்பத்தி நிலையங்களுக்கான கட்டடங்களும் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பண்ணையை மீளவும் இயக்குவது தொடர்பில் தாம் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், அப்பகுதியில் வாழும் கால்நடை உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அங்குள்ளோருக்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் இப் பண்ணையை மீள இயங்க வைப்பது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார்.

இப் பண்ணை ஊடாக நல்லின கால்நடைகளை விருத்தி செய்வதே முக்கிய நோக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது சேவாலங்கா பிரதித் தலைவரும், பேராசிரியருமான நவரட்னராஜா, பணிப்பாளர் கிருசாந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

## மல்லாவி துணுக்காய் வீதி புனரமைப்பு



பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக மல்லாவி துணுககாய் வீதி தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

மல்லாவிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்தார். குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த அமைச்சர் இவ் விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் துறைசார்ந்த அதிகாரிகளிடம் கலந்துரையாடியதன் பிரகாரம் குறித்த வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப் புனரமைப்புப் பணிகளை அமைச்சர். கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

## ஆனையிறவு உப்பளத்திற்கு விஜயம்



ஆனையிறவு உப்பளத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உப்பளத்தின் தொழிற்துறை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

உப்பளத்திற்கு அமைச்சர் கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்டு மேற்படி விடயம் தொடர்பில் ஆராய்ந்தார்.

இதன்போது உப்பள வளாகத்தில் புனரமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டார். அத்துடன் உப்பு வயல்களுக்கான வரம்புகளை நிர்மாணிப்பது தொடர்பில் துறைசார்ந்தோருடன் கேட்டறிந்து கொண்டார்.

ஆனையிறவு உப்பளம் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் வழிகாட்டலுடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் மீள இயக்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரணமானவரின் முதுகில் காயங்கள் இறுதிச் சடங்கின் பின் சடலம் பரிசோதனை

இறுதிச் சடங்குகள் செய்யப்பட்ட சடலமொன்று, பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சம்பவமொன்று யாழ்ப்பாணம், தொண்டமானாறு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கே.கஜநிதிபாலனின் உத்தரவிற்கமையவே இந்தச் சடலத்தை, யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

தொண்டமனாறு, கொட்டியாங்காட்டுப் பகுதியினைச் சேர்ந்த துரைராசா சின்னராசா நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளார். உயர்குருதி அமுக்க நோய் அவருக்கு இருந்தக்காரணத்தினால், அதனாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என நினைத்த உறவினர்கள், அவருடைய சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இறுதிச் சடங்குக் கிரியைகளை நேற்று முன்தினம் அவரது வீட்டில் நடத்தியுள்ளனர்.

இதன்போது, சடலத்தினைக் குளிப்பாட்டுகையில் சடலத்தின் முதுகில் காயங்கள் இருந்ததுடன், மர்ம உறுப்பு இறப்பர் நூலினால் கட்டப்பட்டு இருந்ததுமையும் தெரியவந்தது. இதனையடுத்து, அவரது மரணத்தில் சந்தேகம் கொண்ட உறவினர்கள், வல் வெட்டித்துறைப் பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவல் வழங்கினர்.

இந்நிலையில், பருத்தித்துறை நீதவானுடன் சம்பவ இடத்துக்கு வருகை தந்த வல்வெட்டித் துறைப் பொலிஸார் நீதவானின் உத்தரவிற்கமைய சடலத்தினை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைக்ளுக்காக ஒப்படைத்தனர்.

# இலைகளைப் போட்டு மீன்பிடித்த ஐவர் கைது

தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையில் ஒரு வகையான இலைகளை போட்டு மீன்பிடித்ததாக கூறப்படும் 05 பேரை பருத்தித்துறை முனைக் கடற்பகுதியில் கடற்படையினரும் முனை மீனவர் சங்கமும் இணைந்து நேற்று முன்தினம் கைதுசெய்து தம்மிடம் ஒப்படைத்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடற்பரப்பில் ஒரு வகையான இலைகளை போட்டு கணவாய் பிடிப்பதில் சிலர் ஈடுபடுவதாக முனை மீனவர் சங்கத்துக்கு தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து கடற்படையினரின் உதவியுடன் முனை மீனவர் சங்கத்தை சேர்ந்த இருவர் அங்கு சென்று இவர்களைக் கைது செய்தனர்.

# பச்சை மிளகாய் திருடி மலிவாக விற்றவர் சிக்கினார்

யாழ். கொடிகாமம், கெற்பேலி பகுதியிலுள்ள தோட்டங்களில் பச்சை மிளகாய்களைப் பிடிங்கி அவற்றை சாவகச்சேரி பொதுச் சந்தையில் மலிவு விலையில் விற்பனை செய்து வந்த சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கெற்பேலி பகுதியிலுள்ள தோட்டங்களில் பச்சை மிளகாய்கள் கடந்த ஒரு வார காலமாக இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக குறித்த தோட்டங்களின் உரிமையாளர்களான விவசாயிகள், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

சந்தையில் 400 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையில் பச்சை மிளகாய் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற போதிலும் ஒரு நபர் மட்டும் 150 ரூபாவிற்கு பச்சை மிளகாய்களை விற்பனை செய்து வந்துள்ளார்.

இதனை அவதானித்த விவசாயிகள் • மேற்படி சந்தேக நபர் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில், சிவில் உடையுடன் சந்தையில் மறைந்திருந்த கொடிகாமம் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பொலிஸார், மேற்படி நபர் பச்சை மிளகாய் வியாபாரம் செய்யும் போது கைது செய்தனர்.

தொடர்ந்து, அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, கெற்பேலியிலுள்ள தோட்டங்களில் பச்சை மிளகாய்களைத் திருடி குறைந்த விலையில் அதனை விற்றுவந்ததினை ஒப்புக்கொண்டுள்ளார்.

இச்சந்தேகநபரை இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான பயிற்சி பரீட்சை வினாக்கள்

ஆங்கில மொழிமூலம் கணிதம்

**03. Using the knowledge of facotrs, find the values.**

Eg:-

i) $18^2 - 8^2$
$= (18+8)(18-8)$
$= 26 \times 10$
$= 260$

ii) $57 \times 43$
$= (50+7)(50-7)$
$= 50^2 - 7^2$
$= 2500 - 49$
$= 2451$

iii) $\sqrt{34\times 26+16}$
$= \sqrt{(30+4)(30-4)+16}$
$= \sqrt{30^2 - 4^2 + 16}$
$= \sqrt{30^2 - 4^2 + 4^2}$
$= \sqrt{30^2}$
$= 30$

**Ex. 2.3**
**Find the value of following, using the knowledge of factors**

1) $8 \times 7.5 + 8 \times 2.5$
2) $35^2 - 25^2$
3) $108^2 - 8^2$
4) $85^2 - 15^2$
5) $67^2 - 17^2$
6) $97^2 - 3^2$
7) $27^2 - 23^2$
8) $9985^2 - 15^2$
9) $97 \times 103$
10) $23 \times 17$
11) $58 \times 42$
12) $95 \times 105$
13) $\frac{22}{7} \times 15^2 - \frac{22}{7} \times 8^2$
14) $27 \times 13 + 7^2$
15) $10.25 \times 9.75 + 0.25^2$
16) $\sqrt{47 \times 53 + 9}$
17) $\sqrt{23 \times 33 + 25}$
18) $\sqrt{41 \times 59 + 81}$
19) $\sqrt{102 \times 98 + 4}$
20) $\sqrt{11.5 \times 8.5 + 1.5^2}$

**04. Factorization of trinomiol expressions.**

*Factorize:*
Eg:-

i) $x^2+5x+6$
$= x^2+3x+2x+6$
$= x(x+3)+2(x+3)$
$= (x+2)(x+3)$

ii) $x^2-5x+6$
$= x^2-3x-2x+6$
$= x(x-3)-2(x-3)$
$= (x-3)(x-2)$

iii) $x^2+x-6$
$= x^2+3x-2x-6$
$= x(x+3)-2(x+3)$
$= (x+3)(x-2)$

iv) $x^2-x-6$
$= x^2-3x+2x-6$
$= x(x-3)+2(x-3)$
$= (x-3)(x+2)$

v) $3x^2+7x+2$
$= 3x^2+6x+x+2$
$= 3x(x+2)+1(x+2)$
$= (x+2)(3x+1)$

**Ex. 2.4.1 Factorize:**

| | |
|---|---|
| $a^2+8a+12$ | $x^2+3x+2$ |
| $x^2+2x+1$ | $x^2+12+7x$ |
| $x^2+15+8x$ | $x^2-4x+3$ |
| $x^2-6x+8$ | $x^2-8x+7$ |
| $x^2-9x+14$ | $x^2+x-56$ |
| $x^2+4x-5$ | $x^2+5x-24$ |
| $x^2+2x-8$ | $x^2-4x-12$ |
| $x^2-3x-18$ | $x^2-x-20$ |
| $x^2-4x-21$ | $x^2-x-12$ |
| $x^2-6x-16$ | $x^2-10x+16$ |

**Ex. 2.4.2 Factorize:**

1) $2x^2+11x+12$
2) $3x^2+5x+2$
3) $3x^2+19x+6$
4) $2x^2-7x+3$
5) $3x^2-18x+15$
6) $3x^2+5x-12$
7) $3x^2+13x-10$
8) $2x^2+31x-16$
9) $3x^2+x-4$
10) $3x^2-17x-6$
11) $8x^2-10x-12$
12) $12x^2-x-20$
13) $10x^2+27x-9$
14) $9x^2-29x+6$
15) $4x^2+4x-3$

$(a+b)^2 = a^2+2ab+b^2$
$(a-b)^2 = a^2-2ab+b^2$

*Example:-*
i. $(a+2)^2 = a^2+2\times a\times 2+2^2$
$= a^2+4a+4$
ii. $(a-5)^2 = a^2-2\times a\times 5+5^2$
$= a^2-10a+25$
iii. $(2a+3)^2 = (2a)^2+2\times 2a\times 3+3^2$
$= 4a^2+12a+9$

**Ex. : 3.1 - Expand the following**

1) $(x+1)^2$
2) $(x+5)^2$
3) $(x+5)^2$
4) $(x-6)^2$
5) $(x-8)^2$
6) $(2x+1)^2$
7) $(2x+5)^2$
8) $(3x-2)^2$
9) $(4x-3)^2$
10) $(3x-5)^2$
11) $(3y-2)^2$
12) $(2x-3)^2$
13) $\left(a+\frac{1}{2}\right)^2$
14) $\left(x-\frac{1}{x}\right)^2$
15) $\left(x-\frac{3}{x}\right)^2$
16) $\left(2x-\frac{3}{4}\right)^2$
17) $(4x+1)^2$
18) $\left(5x-\frac{3}{2}\right)^2$
19) $(9x+1)$
20) $(7x-5)^2$

**Example:-**

If $(a+b)=7$ and $ab=5$, find the value of $a^2+b^2$
$(a+b)^2 = a^2+2ab+b^2$
$7^2 = a^2+2ab+b^2$
$a^2+2\times 5+b^2 = 49$
$a^2+b^2+10 = 49$
$a^2+b^2 = 39$

If $(a-b)=9$ and $ab=5$, find the value of $a^2+b^2$
$(a-b)^2 = a^2-2ab+b^2$
$9^2 = a^2+2\times 5+b^2$
$81 = a^2-10+b^2$
$a^2-b^2 = 91$

Ex. : 3.2

1. If $(a+b)^2=25$ and $ab=5$, find $(a^2+b^2)$
2. If $a+b=8$ and $ab=6$, find $(a^2+b^2)$
3. If $a-b=9$ and $ab=3$, find $(a^2+b^2)$
4. If $x-y=7$ and $xy=5$, find $(x^2+y^2)$
5. If $x+y=8$ and $x-y=2$, find $(x^2-y^2)$
6. If $a^2+b^2=16$ and $ab=10$, find $(a+b)$
7. If $a^2+b^2=84$ and $ab=10$, find $(a-b)$
8. If $x+y=10$ and $x^2+y^2=40$, find $xy$
9. If $x-y=9$ and $x^2+y^2=21$, find $xy$
10. If $a+b=6$ and $ab=8$, find $(a^2+b^2)$

**Using the knowledge of expansion biomial expression, find the value**

Eg:- i) $99^2 = (100-1)^2$
$= 100^2 - 2\times 100\times 1+1^2$
$= 1000-200+1$
$= 9801$

ii) $52^2 = (50+2)^2$
$= 50^2+2\times 50\times 2+2^2$
$= 2500+200+4$
$= 2704$

expression:

1) $102^2$
2) $28^2$
3) $999^2$
4) $97^2$
5) $72^2$
6)
7) $498^2$
8) $51^2$
9) $23^2$
10) $198^2$
11) $10.5^2$
12) $17^2$

If $x+\frac{1}{x}=5$, find the value of $x^2+\frac{1}{x^2}$

$\left(x+\frac{1}{x}\right)^2 = x^2+2\times x\times\frac{1}{x}+\frac{1}{x^2}$

$5^2 = x^2+2+\frac{1}{x^2}$

$x^2+\frac{1}{x^2} = 25-2$
$= 23$

1) If $\left(x+\frac{1}{x}\right)^2 = 25$, find $x^2+\frac{1}{x^2}$
2) If $x+\frac{1}{x}=8$, find $x^2+\frac{1}{x^2}$
3) if $x-\frac{1}{x}=9$, find $x^2+\frac{1}{x^2}$
4) If $a-\frac{1}{a}=7$, find $a^2+\frac{1}{a^2}$
5) If $x+\frac{1}{x}=6$, find $x^2+\frac{1}{x^2}$
6) If $x^2+\frac{1}{x^2}=14$, find $x+\frac{1}{x}$
7) If $a^2+\frac{1}{a^2}=14$, find $a-\frac{1}{a}$
8) If $x+\frac{1}{x}=11$, find $x^2+\frac{1}{x^2}$
9) If $b-\frac{1}{b}=7$, find $b^2+\frac{1}{b^2}$
10) If $b^2+\frac{1}{b^2}=83$, find $b-\frac{1}{b}$

**Perfect Squares**

What is the number to be written in the algebraic expression to be a perfect square
$a^2 - 8a + \text{..........}$
$= a^2 - 8a + (4)^2$
$= a^2 - 8a + 16$
$= (a-4)^2$

*Ex:- 3.5*
Exercise

1) Fill in the blanks using approoriate numbers
$(x+.....)^2 = x^2+6x+.......$

2) In the expression $ax^2+bx+c$, b and c are integers. what is the relationship between b and c if the above expression can be written as a perfect square.

3) Find a suitable term in the blank so as to marke the expression a perfect square.

a. $x^2-10x+\text{........} = (x-\text{......})^2$
b. $x^2+\text{........}+16y^2 = (x+\text{......})$
c. $x^2-5x+\text{........} = (x-\text{......})^2$
d. $x^2+6x+\text{........} = (x+\text{......})^2$
e. $x^2+5x+\text{........} = (x+\text{......})^2$
f. $x^2-\text{........}+121 = (x-\text{......})^2$
g. $x^2+\text{......}+\text{........} = (x-1)^2$
h. $x^2-\text{......}+\text{........} = (x-8)^2$
i. $x^2+\text{........}+\frac{9}{4} = (x+\text{......})^2$
j. $x-\text{......}+\frac{49}{4} = (x-\text{......})^2$

$(a+b)^3 = a^3 + 3a^2b + 3ab^2 + b^3$
$(a-b)^3 = a^3 - 3a^2b + 3ab^2 - b^3$
$a^3 + b^3 = (a+b)(a^2 - ab + b^2)$
$a^3 - b^3 = (a-b)(a^2 + ab + b^2)$

**Example:**

i. $(a+3)^3 = a^3 + 3a^2 \times 3 + 3a \times 3^2 + 3^3$
$= a^3 + 9a^2 + 27a + 27$

ii. $(3x-2)^3 = (3x)^3 - 3 \times (3x)^2 \times 2 + 3 \times 3x \times 2^2 - 2^3$
$= 27x^3 - 54x^2 + 36x - 8$

**a. Expand the following**

a.
1) $(x+2)^3$
2) $(x+1)^3$
3) $(a-2)^3$
4) $(x-3)^3$
5) $(2x+1)^3$
6) $(2x-1)^3$
7) $(a+5)^3$
8) $(x-4)^3$
9) $(4x-5)^3$
10) $(7y+2)^3$

b.
1) $x^3 - 1$
2) $a^3 - 8$
3) $8^3 - 1$
4) $8 - a^3$
5) $x^3 - 1000$
6) $x^3 + 1$
7) $8x^3 + 1$
8) $1000x^3 + 1$
9) $p^3 + 125$
10) $125x^3 + 27y^3$

c.

$102^3 = (100+2)^3$
$= 100^3 + 3 \times 100^2 \times 2 + 3 \times 100 \times 2^2 + 2^3$
$= 1000000 + 60000 + 1200 + 8$
$= 1061208$

i) $52^3$
ii) $108^3$
iii) $28^3$
iv) $52^3 + 2^3$
v) $52^3 - 2^3$
vi) $102^3 + 3^3$
vii) $101^3$
viii) $17^3$
ix) $61^3$
x) $89^3$

## Substitution

| Example:- | Example:- |
|---|---|
| If a=3 and b=2, find the value of 5a + 2b | If a = –5 and b = –2, find the value of b – a |
| = 5a+2b | = b – a |
| = 5×3+2×2 | = (–2) – (–5) |
| = 15+4 | = –2 + 5 |
| = 19 | = 3 |

**Ex. 5.1** Evaluate, when $x = 1$, $y = 2$ and $z = 3$

1) $3xy$
2) $2z$
3) $yz + xz$
4) $2y + 4z$
5) $x + 3y - 2z$
6) $y^2z$
7) $2x^2 + y$
8) $y^2 + z^2$
9) $3y^2z^2$
10) $2y^2 - z^2$

1) If $x = -3$ and $y = -2$, find the value of $2x^2 - 5y$
2) If $a = 4$ and $b = -2$, find the value of $2a^2 - b$
3) If $a = -3$ and $b = 2$, find the value of $\frac{a+b}{ab}$
4) If $u = 10$, $t = 2$ and $f = -4$, find the value of S in the formula $S = ut + \frac{1}{2}at^2$
5) If $a = 5$ and $p = -3$, find the value of $2a^2 - 3p$

**Ex. 5.3** If $a = -3$, $b = 2$ and $c = -2$, find the N when

i) $N = ab^2$
ii) $N = (ab)^2$
iii) $N = abc$
iv) $N = \frac{a^2}{c}$
v) $N = \frac{a(c-b)}{2b}$
vi) $N = a^2b - b^2c$
vii) $N = \sqrt{b^2 + 4ac}$
viii) $N = a^2(4b^2 - 3bc)$
ix) $N = a^2(2b + 3c)$
x) $N = a^2 + b^2$

## Forumula

Make 't' as the subject in the given formula

$v = u - ft$
$u - ft = v$
$ft = v - u$
$t = \frac{v-u}{f}$

**Ex:-6.1**

*Exercise*

1) Make "c" as the subject of formula $y = mx + c$
2) Subject "$x$" in the expression $ax = bx + y$
3) Subject "y" in the expression $a = x + 2y$
4) Make "h" as the subject of formula $A = 2\pi r(r + h)$
5) Subject "t" in the expression $S = q + at$
6) Subject "r" in the formula $p = 2\pi r$
7) Make "h" as the subject of formula $A = ½bh$
8) Make "a" as the subject of formula $P = a + b + c$
9) Make "h" as the subject of formula $A = ½(b_1 + b_2)h$
10) Make "c" as the subject of formula $\frac{c}{d} = A + b$
11) Make "b" as the subject of formula $\frac{1}{a} + \frac{1}{b} = \frac{1}{t}$
12) Make "$r_1$" as the subject of formula $\frac{1}{R} = \frac{1}{r_1} + \frac{1}{r_2}$
13) Make "n" as the subject of formula $L = a + (n-1)d$
14) Make "b" as the subject of formula $A = ½(a + b)h$
15) Make "a" as the subject of formula $S = \frac{n}{2}(a + l)$
16) Make "m" as the subject of formula $F = ma$
17) Make "$\pi$" as the subject of formula $A = \pi r^2$
18) Make "b" as the subject of formula $A = \frac{a+b+c}{3}$
19) Make "c" as the subject of formula $F = \frac{9}{5}c + 32$
20) Make "P" as the subject of formula $I = Prt$

Make " b" as the subject of the formula

$y = \sqrt{a+b}$
$y^2 = (\sqrt{a+b})^2$
$y^2 = a + b$
$b = y^2 - a$

**Ex:- 6.2**


*Exercise.*

Make the letter indicated in the bracket as the subject of formula

i) $E = mc^2$, (c)
ii) $A = \pi r^2$, (r)
iii) $S = ½gt^2$, (t)
vi) $W = I^2R$, (I)
v) $N = c^2 - a^2$, (a)
vi) $y = \sqrt{x^2 - a^2}$, ($x$)
vii) $Y = \frac{\sqrt{(x^2 + b2)}}{a}$, (b)
viii) $y^2 = \sqrt{x^2 + b^2}$, ($x$)
ix) $\frac{x}{a} = \sqrt{x^2 + b^2}$, ($x$)
x) $y = \sqrt{\frac{x^2 - a^2}{b}}$, ($x$)
xi) $N = 2.5\sqrt{A}$, (A)
xii) $T = 2\pi\sqrt{\frac{l}{32}}$, (L)
xiii) $Q = \sqrt{\frac{aT}{c}}$, (T)
xiv) $C = \sqrt{a^2 + b^2}$, (b)
xv) $V = \sqrt{\frac{2gE}{m}}$, (E)

# சாவகச்சேரி-விளைவேலி ஸ்ரீ துர்க்கா தேவியின்

## ஏழாம் நாள் உற்சவம் இன்று



உன்னருள் என்றும் நிலைபெற வேண்டும் நீ வருவாய்
அம்மா
என் வாழ்வென்றும் உனைப் பெற வேண்டும் அருள்
புரிவாய் அம்மா
ஏனென்று கேட்டு என்பசி தீர்ப்பாய் என்னன்னை நீ
அம்மா
என்முகம் மலர நின்முகம் மலராய் மலர்ந்திடுவாய்
அம்மா
பயிர்களிலுள்ள பசுமையைக் கண்டேன்
துர்க்காதேவி உன்னையே
உயிர்களிலுள்ள உன்னருள் கண்டேன்
உலகமகா சக்தி நீயே
சரணமடைந்தேன் சங்கரி தாயே சக்தி தேவி நீயே
அகிலாண்டேஸ்வரி நீயே.

த. வத்சலா
(கல்வயல்)

# அரசின் இலவச மின்விநியோகம் மீள் கட்டுமானத்தை நோக்கியதாகும்

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன்

(கிளிநொச்சி)

அழிந்து போன கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் விசேட திட்டமாகவே இலவச மின்சாரம் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் அமைந்துள்ளன என ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முரசுமோட்டைக்கிராமத்திற்கு மின் விநியோகத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் வடக்கு மாகாணத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மக்களின் வீடுகளுக்கான மின் இணைப்புக்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால் இலங்கையில் இருக்கும் ஏனைய எட்டு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களுக்கு இவ்வாறான வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஏனெனில் வடக்கு மாகாணம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற வகையில் இம்மாகாணத்தின் அழிந்து போன கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் விசேட திட்டமாகவே இந்த இலவச மின்சாரம் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் அமைந்துள்ளன.



முரசுமோட்டைப்பகுதியில் அனைத்து மக்களின் வீடுகளுக்கும் மின் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையையிட்டு நாம் மிக்க மகிழ்வடைகின்றோம் மின்விநியோக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மின்சாரத்தினை பெற்ற சில கிராமங்களுக்கு குறிப்பிடத்தக்க இணைப்புக்களை மட்டுமே வழங்க முடிந்தது. ஆனால் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக் மின்சார சபைக்கு மேலதிக நிதிவளம் கிடைக்கப்பெறறது. அதன் அடிப்படையிலேயே தற்போது நடைபெறுகின்ற வேலைத் திட்டங்களின் போது அனைத்து மக்களுக்கும் மின்சாரத்தினை வழங்குவதற்கான இணைப்புக்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என்றார்.

இதில் கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் மனோகரன் வடக்கின் வசந்தம் திட்ட மின்பொறியியலாளர் அமிலடயஸ் வடக்கின் வசந்தம் மின் அத்தியட்சகர் சமிந்த கிளிநொச்சிமாவட்ட மின் அத்தியட்சகர் குகராஜ் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க முகாமையாளர் சுதர்சன் ஆகியோரும் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# சிகிரியாவிற்கு சுற்றுலா செல்ல அடையாள அட்டை அவசியம்

அனுராதபுரம், சிகிரியாவுக்கு சுற்றுலா செல்பவர்களிடம் அவர்கள் இலங்கையர்கள் என்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களிடம் தேசிய அடையாள அட்டை அங்கு கடமையில் இருப்பவர்களினால் கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அடையாள அட்டையை எடுத்துச் செல்லாதவர்கள் வெளிநாட்டவர்களாக கருதப்பட்டு அவர்களிடம் உட்செல்லும் கட்டணமாக ரூபா 3900 செலுத்துமாறு கேட்கப்படுகிறது. சிறு பிள்ளைகளானால் அரைவாசிக் கட்டணமாக 1950 ரூபா செலுத்த வேண்டும்.

இதேவேளை, இலங்கையர்களாக இருந்தால் 50 ரூபா மட்டுமே கட்டணம் அறவிடப்படுகிறது. சிறுவர்களுக்கு 25 ரூபாவும், பாடசாலைப் பிள்ளைகளுக்கு 10 ரூபாவும் செலுத்த வேண்டும். வெளிநாட்டவர்களாக இருந்தாலும் புலம்பெயர் இலங்கையர்களானாலும் 3900 ரூபா கட்டணம் செலுத்தியே உட்செல்ல முடியும்.

காசியப்பனின் கோட்டை மற்றும் அரண்மனை போன்ற புராதன கட்டங்களைப் பார்வையிடுவதற்காக சிகிரியாவுக்கு பலர் கற்றல் பயணம் மேற்கொள்கின்றார்கள்.

ஆனால், சிகிரியாவுக்கு சுற்றுலா மேற்கொள்பவர்கள் தேசிய அடையாளஅட்டை கொண்டு வர வேண்டும் என முன்கூட்டியே அறிவிக்கபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், சுற்றுலாப்பயணிகள் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் பெரிதும் நெருக்கடிக்குள்ளாவதாக தெரியவந்துள்ளது. (137)

# வருடாந்த மஹோற்சவம்

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி மாலை வேட்டைத் திருவிழாவும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ காலத்தில் காலைப்பூஜை 6.30 மணிக்கு நடைபெறும் என அறிவித்த ஆலய நிர்வாகத்தினர் தங்களால இயன்ற பூ வகை, மாலை, பால், இளநீர் போன்றவற்றை ஆலயத்திற்கு கொண்டுவருமாறும் பக்தர்களுக்கு அறிவித்துள்ளனர். (இ)

# வறிய மாணவர்களுக்கு வசதிக் கட்டணம் இல்லை

(வரணி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வருடாந்த வசதிக்கட்டணம் செலுத்த முடியாத ஏழை மாணவர்களுக்கு வசதிக் கட்டணம் விலக்களிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவனின் குடும்பத்தலைவர் அல்லது மிகவும் வறுமைக்கோட்டில் வாழும் குடும்பமென்றால் சம்பந்தப்பட்ட பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதத்தைப் பெற்று பாடசாலை அதிபருக்கு தெரியப்படுத்தினால் இப்பணத்தை செலுத்தாது விடமுடியுமென தெரிவிக்கப்படுகிறது. (150)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகிலுள்ள பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அங்கு இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டபோது...

(படம்-கே.நந்தகுமார்)


## வாழ்க வளமுடன்

பெயர் : ஜெ.சதுசன்
முகவரி : ஆனை விழுந்தான்
வன்னேரி
அகவை 6 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர் : செ.மரியன்பெவன்
முகவரி : உயரப்புலம், ஆனைக்கோட்டை.
அகவை 9 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ....................................
முகவரி :- ....................................
பிறந்த ஆண்டு :- ....................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

....................................
பெற்றோர் கையொப்பம்

– சீனா, பிலிப்பைன்ஸ் நாடுகளில் –

# “ரம்மசான்” புயல் தாக்கம் 112 பேர் உயிரிழப்பு




(பீஜிங்.)

சீனாவின் தெற்கு கடலோரப் பகுதிகளில் வீசிய கடும் சூறாவளி புயலில் சிக்கி 18 பேர் பலியானார்கள். இதேபோல், பிலிப்பைன்சிலும் சூறாவளி புயலில் சிக்கி 94 பேர் பலியாகியுள்ளனர்.

சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் உட்பட பல்வேறு நாடுகளைக் கடந்த வாரம் ரம்மசான என்ற கடும் சூறாவ்ளி புயல் தாக்கியது. இந்த சூறாவளி புயல் கடந்த வெள்ளியன்று வடக்கு வியட்நாமைக் கடக்கும்போது, தெற்கு சீனாவில் உள்ள ஹைனன் தீவை கடுமையாக தாக்கியது.

தென்சீன கடற்பகுதிகளை மணிக்கு 216 கிலோமீற்றர் வேகத்தில் ரம்மசான் புயல் தாக்கியது. இந்தச் சூறாவளி புயலில் சிக்கி ஏராளமான வீடுகள் இடிந்து விழுந்தன. பல்வேறு மரங்கள் வேரோடு முறிந்து விழுந்தன. மின்கம்பங்கள் சரிந்து விழுந்தன. இதனால் அப்பகுதிகளில் மின்சாரம் மற்றும் குடிநீர் இல்லாமல் மக்கள் தவித்தனர்.

ஹைனன் தீவில் சூறாவளி புயலில் சிக்கி 10 பேர் பலியானார்கள். மேலும் 4 பேர் புயலில் சிக்கி காணாமற் போய் விட்டனர். காங்க்சி பிராந்தியத்தில் 8 பேர் பலியானார்கள். இப்பிராந்தியங்களில் சூறாவளி புயலைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான பேருந்து, ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. சூறாவளி புயல் தாக்கிய பகுதிகளில் தற்போது மீட்புப் பணிகளும் நிவாரணப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்று அப்பிராந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்சீன கடற்பகுதிகளில் கடந்த 41 ஆண்டுகளில் வீசிய புயல்களை விட இந்த ரம்மசான் புயல் மிக வலுவாக இருந்தது என்று சீன வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது.

உலகச் செய்திகள்

# விபத்துப் பகுதியில் ஆய்வு நடத்த நிபுணர்களை அனுமதிக்க வேண்டும்

ரஷ்ய ஜனாதிபதி வலியுறுத்தல்



மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பகுதியில் ஆய்வு நடத்த சர்வதேச நிபுணர்களை அனுமதிக்க வேண்டும் என்று உக்ரைன் கிளர்ச்சியாளர்களிடம் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது,

உக்ரைன் அரசும் கிளர்ச்சியாளர்களும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்திருக்காது. இப்போது இச்சம்பவத்தைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கப்படுகிறது. இதனை அரசியலாக்க யாருக்கும் உரிமை இல்லை.

இருதரப்பினரும் உள்நாட்டுப் போரைக் கைவிட்டு அமைதி வழியில் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். அதுதான் ரஷ்யாவின் விருப்பம். விமானம் விழுந்த இடத்தில் சர்வதேச நிபுணர்கள் ஆய்வு நடாத்த கிளர்ச்சியாளர்கள் அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பகுதியில் இருந்து மீட்கப்பட்ட உடல்களை நெதர்லாந்து நிபுணர் குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆய்வு செய்தனர்.

பலியானவர்களின் உடல்களை உக்ரைன் கிளர்ச்சியாளர்கள் மீட்டு குளிர்சாதன வசதி கொண்ட ரயில் பெட்டிகளில் வைத்துள்ளனர். டோரஸ் ரயில் நிலையத்தில் அந்தப் பெட்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பலியானவர்களில் பெரும்பாலானோர் நெதர்லாந்தை சேர்ந்தவர்கள் என்பதால் மீட்கப்பட்ட உடல்கள் ரயில் மூலம் நெதர்லாந்துக்கு அனுப்பப்படும் என்று உக்ரைன் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# குழந்தைத் திருமணங்கள் 6 வது இடத்தில் இந்தியா

ஐ.நா. கவலை

உலகின் 42 சதவீதக் குழந்தை திருமணங்கள் ஆசியா கண்டத்தில் நடைபெறுவதாக தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கை, குழந்தை திருமணங்கள் அதிகமாக நடைபெறும் உலகின் முதல் பத்து நாடுகளில் இந்தியா 6ஆவது இடத்தில் உள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமான ‘யூனிசெவ்’ எனப்படும் சர்வதேச குழந்தைகள் கல்வி நிதியம் இது தொடர்பாக வெளியிட்ட ‘குழந்தைத் திருமண ஒழிப்பு’ என்ற ஆய்வறிக்கையில், உலகளாவிய அளவில் வாழும் சுமார் 70 கோடி பெண்கள் தங்களது 18ஆவது வயதை அடைவதற்கு முன்னதாகவே திருமணம் செய்து கொண்டுள்ளனர் என்றும், 25 கோடி பெண்கள் 15ஆவது வயதை எட்டும் முன்னரே திருமணம் செய்து கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிடுகிறது.

இந்தியாவில் தற்போது வாழும் 20 முதல் 49 வயதுக்குட்பட்ட 27 சதவீதம் பெண்கள் 15 வயதுக்கு முன்னதாகவும், இதே வயது வரம்புக்குட்பட்ட 31 சதவீதம் பெண்கள் 15இற்கும் 18இற்கும் இடைப்பட்ட வயதிலும் திருமணம் செய்து வைக்கப்படுகிறார்கள் எனவும் இந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

## இந்திய அணு சக்திக்கு முதல் முக்கியத்துவம்



அணுசக்திக்கான முக்கியத்துவம் தொடரும் என்று பிரதமர் மோடி ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல்வேறு துறைகளிலும் நமது விஞ்ஞானிகள் காட்டியுள்ள உழைப்பு, நம்மை பெருமை கொள்ளச் செய்கிறது. தூய்மையான, நம்பகமான மூலாதார அடிப்படையிலான சக்தி பாதுகாப்பு, இந்தியாவின் எதிர்காலததிற்கு மிக முக்கியம். இந்தியாவின் சக்தி கொள்கையில், அணுசக்தி முக்கிய பங்கு வகிக்கிறது.

‘அணு சக்தி பாதுகாப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்படும். உலக அளவில் பயன்படுத்தப்படும் தரம் வாய்ந்த பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுமாறு விஞ்ஞானிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

‘இந்திய இளைஞர்களுக்குப் பயன் தரத்தக்க வகையில் அணு சக்தி அறிவியலின் வளர்ச்சி பரிமாணத்திற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்றார்.

# மதம் மாறு அல்லது இறந்துபோ ஈராக்கில் மிரட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ்



(ஈராக்)

ஈராக்கில் வாழும் கிறிஸ்தவர்கள் மதம் மாற வேண்டும் அல்லது வரி செலுத்தவேண்டும் என ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் உயிர் வாழ ஆசைபட்டால் தங்களுக்கு ‘ஜிஸியா’ எனும் வரி செலுத்த வேண்டும் அல்லது மதம் மாற வேண்டும், இல்லையேல் கொல்லப்படுவர் என ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, கடந்த 19ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த இந்த எச்சரிக்கை வரும் 26ஆம் திகதி (சனிக்கிழமை) வரை அமுலில் இருக்கும் என்று காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அதற்குள் கிறிஸ்தவர்கள் மதம் மாறவோ அல்லது ‘ஜிஸியா’ வரியைச் செலுத்தவோ முடிவு செய்ய வேண்டும் என்றும் கெடு நாளுக்குப் பிறகு இதில் எந்த முடிவையும் தேர்வு செய்ய வில்லையெனில், அவர்கள் எங்கள் வாளுக்கு இரையாக நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே மொசூல் நகரில் இருந்த 5,000 கிறிஸ்தவர்களில் பலர் நாட்டை விட்டு வெளியேறி, தற்போது 200 பேர் மட்டுமே உள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.



ஷர்வான் மாதத்தின் இரண்டாம் திங்களையொட்டி இந்தியாவின் ஆக்ராவில் நதிக்கரையோரம் உள்ள லிங்கத்தை தரிசிக்கும் பக்தர்கள்.

## புதியதோர்..

இந்த உலகத்தில் அவர்களின் நியாயத்தராசிலிருந்து எவரும் தப்ப முடியாது. அது விக்னேஸ்வரனில் தொடங்கி பராக் ஒபாமா வரையும் நீளும். அசாமிலோ ஆபிரிக்காவிலோ சுமைதாங்கியபடி செல்லும் சிறுவனின் புகைப்படமொன்று இணையத்தில் வரும். இப்படியான காட்சிகள் நடக்கும் உலகத்தை ஒரு பார்வையில் எரிக்கும் கண்ணகி விழிகளை எனக்கும் தா என்று சாரப்பட ஒரு கவிதை எழுதி, படத்துடன் சேர்த்து தட்டிவிடுவார்கள். இத்தனைக்கும் இந்த வகையான எண்ணற்ற சிறுவர்களை நாங்கள் தினமும் கடந்து கொண்டுதான் உள்ளோம்.

இன்னும் சொன்னால், மிருக பலிக்கு எதிராகவும் ஒரு லைக். அங்கு வெட்டப்பட்ட ஆட்டின் இறைச்சியில் சமைத்தது என, நல்ல தூள்ப்பிரட்டலாக கறியின் படமிருந்தால் அதற்குமொரு லைக். சாதிய எதிர்ப்பு போராட்டமென்றால் அதற்கும் ஒரு லைக். உங்கள் சாதியில் பெண் பாருங்கள் என்று வரும் திருமணத்தளங்களிற்கும் ஒரு லைக்.

இதுதான் பொதுவாக தமிழர்களின் உளவியல். கிட்டத்தட்ட கனவுகாண்பதை ஒத்த உளவியல்தான் இணையத்தில் தீவிரமாக இருப்பவர்களின் உளவியலும் என நினைக்கிறேன். இது பற்றி பேஸ்புக் நிறுவனமோ அல்லது வேறு உளவியலாளர்களோ நிச்சயம ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

அப்பொழுதுதான் புதியதொரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை நிஜவுலகத்திற்கு கொண்டு வரலாம்.

# உமையாள்புரத்தில் கொட்டும் கழிவுகளால்

# வீட்டுத்திட்டத்தை இழக்கவுள்ள குடும்பங்கள்



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் உள்ள உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் குடியிருப்புக்கு அருகிலும் ஒரு சில மக்களினது காணிகளிலும் கிளிநொச்சி நகரினதும் அதனை அண்டிய பிரதேசங்களினதும் கழிவுகள் கொட்டப்படுவதனால் கழிவுகள் கொட்டப்பட்டுள்ள காணியில் வீட்டுத்திட்டத்தை பெற்றுள்ள ஏழு குடும்பங்கள் வீட்டுத் திட்டத்தை இழக்கும் அபாயத்தில் உள்ளதாக கண்டாவளை பிரதேச அபிவிருத்தி மீளாய்வு கூட்டத்தில் உமையாள்புரம் கிராம […]கள் அமைப்பு பிரதிநிதி ஒருவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாக நிலைமைகளை நேரில் சென்று ஆராய்வதற்கு அன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைவாக நேற்று கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன்,கிளிநொச்சி மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் பு.சுபோகரன், கண்டாவளை பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் ராஜ்வினோத்,பிரதேச செயலக சுற்றுச்சூழல் அதிகாரி, கண்டாவளை காணி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் அடங்கிய குழுவினர் உமையாள்புரம் கழிவுகள் கொட்டப்படுகின்ற பிரதேசத்திற்கு நேரடியாக சென்று நிலைமைகளை ஆராய்ந்ததோடு கடும் அதிருப்தியும் அடைந்தனர்.

இது தொடர்பாக கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன் கருத்துத்தெரிவித்த போது பிரதேச செயலகத்தால் கரைச்சி பிரதேச சபைக்கு 10 ஏக்கர் காணி உமையாள்புரம் கிராமத்தில் ஏ-9 வீதியிலிருந்து மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் ஒதுக்கி வழங்கப்பட்டிருந்தது. அத்தோடு கழிவு அகற்றப்படும் வாகனங்கள் இலகுவாகச் சென்று வரும் வகையில் கிரவல் மூலம் வீதியும் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது ஆனால் பிரதேச சபையினர் எவ்வித சமூகப்பொறுப்புமின்றி இவ்வாறு கழிவுகளை கொட்டுவது கண்டிக்கத்தக்கது. குறிப்பாக இந்த இடங்களில் கொல்களங்களில் வெட்டப்படுகின்ற விலங்குகளின் கழிவுகள் கொட்டப்படுவதால் அது கட்டாக்காலி நாய்களாலும் காகங்களினாலும் இழுத்துச்செல்லப்பட்டு மக்கள் குடியிருப்புக்கு விடப்படுவதனால் பெரும் சுகாதார சீர்கேடுகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. எனத்தெரிவித்த அவர் இங்கே ஒரு குடும்பம் வீட்டுத் திட்ட பயனாளியாக தெரிவு செய்யப்பட்டு அத்திவாரம் போடுவதற்கு கண்டகல்லும் பறிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் வீட்டினை கட்ட முடியாத நிலையில் அவரது காணியில் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளது. எனவும் தெரிவித்தார்.

மேலும் இங்கு வருகை தந்திருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர் பு.சுபோகரன் இது ஒரு மிக மோசமான கழிவு அகற்றும் முறை இதனால் மக்களுக்கு பெரும் சுகாதார சீர்கேடுகளே ஏற்படும். முக்கியமாக இந்த கழிவுகள் நிலத்தடி நீருக்குள் கலப்பதனால் பதினைந்து, இருபது வருடங்களுக்கு நிலைத்திருக்கக்கூடிய நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படும். தற்போதைய காலத்தில் நவீன முறையிலான கழிவுகள அகற்றும் முறைகள் இருக்கின்ற போது இவ்வாறு பரந்த வெளிகளில் கொட்டிவிட்டுச் செல்வது சூழலுக்கு மிகவும் ஆபத்தான நிலைமையினையே ஏற்படுத்தும் இது உடனடியாக நிறுத்தப்பட்டு பாதுகாப்பான கழிவகற்றல் முறைக்கு செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் கடந்த 2011 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபைக்கு பாதுகாப்பான கழிவகற்றல் திட்டத்திற்கு என ஒன்பது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது ஆனால் அவர்கள் அந்த நிதியை இது வரை பயன்படுத்தியதாக தெரியவில்லை எனக் குறிப்பிட்டார். (29)

## பச்சை மிளகாய் திருட்டு சந்தேக நபரொருவர் கைது

கொடிகாமம், கெற்பேலி பகுதியிலுள்ள தோட்டங்களில் பச்சை மிளகாய்களை திருட்டுத்தனமாகப் பிடுங்கி அவற்றை சாவகச்சேரி பொதுச்சந்தையில் மலிவு விலையில் விற்பனை செய்து வந்த சந்தேகநபர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கெற்பேலி பகுதியிலுள்ள தோட்டங்களில் பச்சை மிளகாய்கள் கடந்த ஒரு வார காலமாக இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக குறித்த தோட்டங்களின் உரிமையாளர்களான விவசாயிகள், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

சந்தையில் 400 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையில் பச்சை மிளகாய் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற போதும், ஒரு நபர் மட்டும் 150 ரூபாவிற்கு பச்சை மிளகாய்களை விற்பனை செய்து வந்துள்ளார். இதனை அவதானித்த விவசாயிகள் மேற்படி சந்தேக நபர் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சிவில் உடையுடன் சந்தையில் மறைந்திருந்த கொடிகாமம் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பொலிஸார், மேற்படி நபர் பச்சை மிளகாய் வியாபாரம் செய்யும் போது கைது செய்தனர்.

தொடர்ந்து, அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, கெற்பேலியிலுள்ள தோட்டங்களில் பச்சை மிளகாய்களைத் திருடி குறைந்த விலையில் அதனை விற்றுவந்ததினை ஒப்புக்கொண்டுள்ளார்.இச்சந்தேகநபரை இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

## கலந்துரையாடல்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உட்கட்டமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ப.ஜெராணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

யு.என். கபிற்றாற் நிறுவனத்தின் பங்களிப்புடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதி, வீதி மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் தவறாது பங்களிக்குமாறு கோரப்பட்டுள்ளது.(92)

### நியதிச்சட்ட...

ஆணைக்குழு ஆகியவற்றின் முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சில பரிந்துரைகளுடன் நியதிச் சட்டங்களுக்கான அங்கீகாரத்தை சிலநாட்களில் சமர்ப்பிப்பதாகவும் ஆளுநர் தெரியப்படுத்தியுள்ளதாக வடமாகாண சபையின் அவைத்தலைவர் […]வி.கே. சிவஞானம் அறிவித்தி[…]தார்.

இந்த நிலையில் இந்த நியதிசட்டங்களுக்கான அங்கீகாரத்தை நேற்றையதினம் அளித்த ஆளுநர், அதனை மாகாணசபைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### வடபகுதி...

குமார் உத்தரவிட்டார்.

இதேவேளை, தலைமன்னாரில் கைதானவர்கள் இன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவரென மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் வி.எஸ்.மெராண்டா தெரிவித்தார். (பா,25)

### யுத்தத்திற்கு...

வெற்றிகரமாக பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு நடத்தப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களில் கூறப்படுவதனை விடவும் இலங்கையின் மெய்யான நிலைமை மாறுபட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். முரண்பாடுகளின் பின்னர் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதில் ஆபிரிக்க நாடுகள் சில நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றமைக்காக தன்சானியாவிற்கு நன்றி பாராட்டுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது தெரிவித்துள்ளார்.

### தருஸ்மனின்...

தினது விளக்கங்களைக் கோருவோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதியால் ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள அனைத்துலக சட்ட நிபுணர்களில் மற்றொருவரான, பேராசிரியர் டேவிட் கிறேன், இலங்கையின் உள்நாட்டுப் போர், சவால்களும், குற்றச்சாட்டுகளும் கொண்டது என்பது தனக்குத் தெரியும் என்று தெரிவித்துள்ளார்.

தற்போது பொது அரங்கில், உள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான எல்லா விடயங்களையும், தமது குழு ஆராயும் என்றும் அவர் கூறியுள்ளார்.

திறந்த மனதுடனேயே இந்த நியமனத்தை பொறுப்பேற்றுள்ளேன். பொருத்தமான சட்ட ஆலோசனையை வழங்க நான் தயாராக இருக்கிறேன். என்றும் தெரிவித்துள்ளார்.

### யுத்தக்...

அடங்கிய நிபுணர் குழு இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணைக் குழு தற்போது யுத்தகால இழப்புக்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயலகள் தொடர்பிலும் விசாரணை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணை அவசியமற்றது என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்து வந்த நிலையில், தற்போது திடீரென நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

யுந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் மற்றும் ஏனைய முக்கிய நிகழ்வுகளின் போது படையினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பிரகடனங்களுக்கு அமைவான வகையில் யுத்தத்தில் ஈடுபட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதிபடக் கூறியிருந்தார் எனத் தெரிவித்துள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் திடீரென யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அரசாங்கத்தின் திடீர் மாற்றத்திற்கான பிரதான ஏது எதுவென்பதனை பகிரங்கப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி உள்ளது.

படையினரைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை எனவும் தேவை ஏற்பட்டால் தாமே மின்சார நாற்காலி தண்டனையை அனுபவிக்கப் போவதாகவும் நடைபெற்று முடிந்த தென் மற்றும் மேல் மாகாணசபைத் தேர்தல்களின் போது ஜனாதிபதி அறைகூவல் விடுத்திருந்தார் என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, சர்வதேச நாடுகளின் போர்க்குற்ற விசாரணை கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதி பெற்றுக் கொள்ளப் படாமலேயே நிபுணர் குழுவினை ஜனாதிபதி நியமித்துள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் இரகசிய இராஜதந்திர இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

### இயற்கை...

லிய அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நீதிபதி அளித்த காலக்கெடு முடிவடைந்து, 19 மணிநேரம் கழித்தே, இந்த 14 பக்க அறிக்கையை அவுஸ்ரேலிய அரசு சமர்ப்பித்துள்ளது. இதற்காக, அரசதரப்பு சட்டவாளர் நீதிபதியிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். சுங்கக் கப்பலின் மூன்று அறைகளில் அகதிகள் தடுத்து வைகக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று தனித்தனியாக அடைத்து வைக்கப்பட்டுள்ளதால், குடும்பங்கள் பிரிந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உணவுக்காக மட்டும், நாளொன்றுக்கு 3 மணிநேரம், அறைகளை விட்டு வெளியே வந்து இயற்கை வெளிச்சத்தில் நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவுஸ்ரேலிய அரசின் அறிக்கை தெரிவித்துள்ளது.

பாதுகாப்புக் கர்ரணங்களுக்காக அவர்களை கப்பலில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க முடியவில்லை என்றும் அவுஸ்ரேலிய அரசாங்கம் நீதிமன்றத்தில் கூறியுள்ளது.

### இலங்கைத்...

கப்பட்டது, நிலைமையைப் புரிந்து கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அதில் தலையீடு செய்யக் கூடாது. மாநில அரசாங்கங்கள், அதில் தலையிடக் கூடாது என்று நாங்கள் பலமாக உணர்கிறோம்.

அவர்கள் ஆலோசனை வழங்கலாம், ஆனால் அதில் செல்வாக்கைச் செலுத்தக் கூடாது. தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள், தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, வெளிவிவகாரக் கொள்கை விவகாரத்தில், மத்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளன.

ஆனால், மோடி அரசாங்கம் எந்தவொரு பிராந்தியக் கட்சியிலும் தங்கியிருக்காமல் பலமாக உள்ளது. கொழும்புக்கும் இலங்கையில் உள்ள தமிழர்களுக்குமான பிரச்சினை உள்நாட்டு விவகாரமாகும்.

இந்தப் பிரச்சினைகளை அனைத்துலக மயமாவதற்குப் பதிலாக, கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலேயே சிறந்த முறையில் தீர்க்க முடியும்.

பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்பட முடியும்.

ஒன்று அல்லது இரண்டு நாடுகள் இணைந்து கொண்டு தனிநாடு ஒன்றுக்கு எதிராக, தண்டனைத் தீர்மானங்களைக் கொண்டு வரும் காலம் மாறிவிட்டது.

தீர்மானங்கள் மற்றும் தடைகளை விதிக்கும் யோசனைகளால் பயனில்லை. அவை எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியதை, இரண்டாவது அணுகுண்டுப் பரிசோதனைக்குப் பின்னர் இந்தியா, ஈரான் மற்றும் மியான்மரில் பார்த்திருக்கிறோம்.

அதேவேளை தமிழர்களின் கவலைகளுக்கு இலங்கை பதிலளிக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலுடன் உறவு வேண்டாம் அரசுக்கு கூறுகிறார் தயான்



காசாவில் பலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடத்திவருகின்ற இஸ்ரேலுடன் இலங்கை சகல தொடர்புகளையும் கைவிட வேண்டுமென்று இலங்கை பலஸ்தீன ஒத்துழைப்பு அமைப்பு இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இந்த அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய கூட்டத்தில் இக்கோரிக்கையை வலியுறுத்தி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதி தயான் ஜெயதிலக, இலங்கை ஜனாதிபதி பலஸ்தீனர்களுக்கு ஆதரவான கொள்கையைக் கடைப் பிடித்தாலும், வெளிநாட்டு அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இஸ்ரேல் அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வட,கிழக்கில் பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசின் உயர்மட்ட பாதுகாப்புக் குழு இஸ்ரேலிடமிருந்து ஆலோசனைகள் பெற்றிருந்தது. என்றும், இதனால்தான் வெளிநாடுகளில் தமிழ் பிரிவினைவாதிகள் பலமடைந்தனர் என்றும் தயான் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையின் தவறான வெளியுறவுக் கொள்கையே இந்நிலைக்கு காரணம் என அவர் சாடினார்.

இலங்கையில் அண்மைக் காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக நடந்துவரும் வன்முறையின் பின்னணியில் இஸ்ரேலின் ஆதரவைப் பெற்ற குழுக்கள் இருப்பதாக அவர் பழிசுமத்தினார்.

எனினும் பலஸ்தீனம் தொடர்பான இலங்கையின் வெளியுறவுக்கொள்கையில் மாற்றம் இல்லை என்றும், அண்மையில் நடந்த அமைச்சரவைக் கூட்டங்களின்போது பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக செயல்படுமாறு ஜனாதிபதி அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டார் என்றும் இலங்கை பலஸ்தீன ஒத்துழைப்பு சங்கத்தின் சமதலைவர் அமைச்சர் அதாவு செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருள் மையமாக மாறி வருகிறது இலங்கை

## கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

உலகப் போதைப் பொருள் மையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வரும் முக்கியஸ்தர்கள் யார், பிடிக்கப்பட்ட போதைப் பொருளுக்கு என்னவாயிற்று இவை கோதுமை மாவாக மாறுகின்றனவா?

போதைப் பொருள் கடத்தலுடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு இருப்பதாக கடுமையான குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. குற்றச்செயல்கள் தொடர்பில் உலகம் உன்னிப்பாக அவதானிக்கின்றது.

போதைப் பொருள் கடத்தலுடன் அரசியல்வாதிகளுக்கு தொடர்பு இருப்பதாக அரசியல்வாதிகளே ஒப்புக் கொண்டுள்ளனர்.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சிறிய சிறிய நெத்தலிகளே கைது செய்யப்படுகின்றனர்.

சுறா போன்ற முக்கிய மீன்கள் கைது செய்யப்படுவதில்லை. கொள்கலன் கணக்கில் பிடிபடும் போதைப் பொருட்களுக்கு என்ன நேர்கின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்திற் கொண்டே இந்தக் கேள்விகளை கேட்க நேரிடுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலிய புகலிடதாரிகளுடன் தொடர்புகொள்ள இந்தியா முயற்சி



அவுஸ்ரேலியாவுக்கு இந்தியக் கடற்பரப்பில் இருந்து படகில் சட்டவிரோதமாகச் சென்ற தஞ்சம் கோரிகளுடன் இந்தியத் தூதரக அதிகாரிகள் தொடர்பு கொள்ள இந்திய அரசு அனுமதி கோரியுள்ளது.

இந்தியாவில், புதுச்சேரிக்கு அருகே உள்ள கீழ்ப்புத்துப்பட்டு என்ற கிராமத்திலும், பிற சில அகதிகள் முகாம்களில் இருந்தும் சுமார் 157 இலங்கை அகதிகள் படகில் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்ல முயன்று அங்கு அவுஸ்ரேலியக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில், இந்த பிரச்சினை குறித்து இந்திய அரசிடம் பேச அவுஸ்ரேலியக் குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் நேற்று புதுடில்லி வந்தடைந்தார். இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடனும், வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

இந்த சந்திப்பின் போது பேசிய அவுஸ்ரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன கடந்த யூன் மாதம் 157 அகதிகளை ஏற்றிச் சென்ற படகை அவுஸ்ரேலிய அதிகாரிகள் பறிமுதல் செய்த சம்பவத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்தியாவிற்குள் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாக யாரும் குடிபுகுவதையோ, அல்லது இந்தியாவிலிருந்து யாரும் சட்டவிரோதமாக குடிஅகல்வதையோ இந்திய அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இது தவிர, இந்தப் பிரச்சினை சட்டரீதியாகவும், மனிதாபிமான ரீதியிலும் கையாளப்படவேண்டும் என்றும், யாருக்கும் எந்தவித தீங்கும் ஏற்படக் கூடாது, என்றும், குறிப்பாக சிறார்கள் பாதிக்கப்படக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

# பொலிஸாரின் சேவைக்கு அதிகளவில் விமர்சனங்கள்

## பொலிஸ் மா அதிபர் கவலை

(கொழும்பு)

பொலிஸார் தொடர்பில் அதிகளவு விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருவதாக பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் எவ்வளவு சேவையாற்றினாலும் அவர்கள் விமர்சிக்கப்படுகின்றனர்.

குற்றச் செயல்கள் தொடர்பில் தீர்வுகளை வழங்கும் பணிகளில் பொலிஸார் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் குற்றச் செயல்களுக்குத் தீர்வு வழங்குவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பல்வேறு விமர்சனங்களுக்கு சிறந்த முறையில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களை பதவி உயர்வு வழங்குவதன் மூலம் ஊக்குவிக்க முடியும். எனத் தெரிவித்துள்ளார்.

# லிபியாவிலுள்ள இலங்கையரை திரும்ப அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

லிபியாவில் உள்ள அனைத்து இலங்கையர்களையும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

லிபியாவில் இடம்பெறும் மோதல்கள் மற்றும் இலங்கைப் பிரஜைகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.

இதுவரை, லிபியாவில் பாதிப்புக்குள்ளான 14 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சரின் பணிப்புரைக்கமைய லிபியாவில் உள்ள அனைத்து இலங்கையர்களையும் நாட்டுக்கு அழைத்துவர தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு கெய்ரோவிலுள்ள தூதரகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும், தரவுகளுக்கு அமைய மேலும் 200 இலங்கையர்கள் லிபியாவில் தங்கியுள்ளதாகவும் பணியகம் தெரிவிக்கின்றது.

இவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கையினை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலன்புரி அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

லிபியால் தற்போது காணப்படுகின்ற நிலை பாதுகாப்பற்றதாகவும், அபாயகரமாகவும் காணப்படுவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

# தடை செய்த வலைகள் மூலம்; கணவாய் பிடித்த ஐவர் கைது



(கரணவாய்)

தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி கணவாய் பிடித்த ஐவரை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

பருத்தித்துறை முனைப்பகுதியில் தடை செய்த வலைகளைப் பயன்படுத்தி எழுவர் கணவாய் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் இராணுவத்தினரின் உதவியுடன் அவர்களைக் கைது செய்ய முற்பட்டவேளை இருவர் தப்பியோட ஐவர் பிடிப்பட்டதுடன், அவர்களின் 2 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

நேற்றைய தினம் இந்த ஐவரையும் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியவேளை, படகோட்டிகள் மூவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதவான் ஏனைய இருவரையும் எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார். அத்துடன் படகுகளையும் உரியவர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (18)

# ஆன்மீகத் தலைவராக தலாய்லாமா; ஏற்கமாட்டாது பொதுபலசேனா

தலாய் லாமாவை ஆன்மீகத் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பௌத்தர்கள் முஸ்லிம்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடக்கூடாது என தலாய்லாமா அண்மை யில் கோரியிருந்தார்.

இந்த கோரிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்ட போது கலகொட அத்தே ஞானசார தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகள் தலாய் லாமாவை பிழையாக வழி நடத்தி வருகின்றன.

கிறிஸ்தவர்களின் தலைவராக பாப்பாண்டவர் கருதப் பட்டது போன்று, தலாய்லாமாவை உலக பௌத்த தலைவராக அமெரிக்கா உருவாக்கியுள்ளது. இதனை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இஸ்லாமிய தீவிரவாதிகளின் பிரசார வலையில் தலாய் லாமா சிக்கியுள்ளார். இலங்கையில் முஸ்லிம் எங்கு தாக்கப்படுகின்றார்கள் என தலாய் லாமாவிடம் கேட்க விரும்புகின்றோம்.

முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் சில ஆங்கில ஊடகங்கள் சம்பவத்தை திரிபுபடுத்தி செய்தி வெளியிட்டுள்ளதாகவும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி வாள் வெட்டு எழுவரின் விளக்கமறியல் நீடிப்பு

சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்திற்குள் இளைஞர் ஒருவரை வாளால் வெட்டி கொலை செய்தனர் என்ற சந்தேகத்தில் கைதான ஏழு பேருக்கும் விளக்க மறியல் நீடிக்கப்படுள்ளது.

கடந்த மாதம் ஆம் 5 ஆம் திகதி கச்சாய் அம்மன் கோவில் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் காயமடைந்த இளைஞர் ஒருவரை முச்சக்கரவண்டியில் ஏற்றி வந்து வைத்தியசாலையில் அனுமதித்த இளைஞனை துரத்தி வந்தவர்கள் வாளால் வெட்டிக் கொலை செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.